மாநகர சபை, யாழ்ப்பாணம்

விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆவணி 15 ஞாயிற்றுக்கிழமை (31.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 256








# புறக்கோட்டையில் குண்டு வெடிப்பு

## 47 பேர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியில் நேற்று பகல் 12.15 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 47 பேர் படுகாயமடைந்துள்ளனர். இவர்களில் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

மணிக்கூடு விற்பனை செய்யும் அங்காடி ஒன்றில் வைக்கப்பட்டிருந்த பொதி ஒன்றிலிருந்தே குண்டு வெடித்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

(12 ஆம் பக்கம் பார்க்க)



குண்டுவெடிப்பு இடம்பெற்ற பகுதி

## தமிழ்க் கூட்டமைப்பினர் இவ்வாரம் இந்தியா பயணம்

(கொழும்பு)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செப்ரெம்பர் மாதம் முதல் வாரத்தில் இந்தியாவுக்குச் செல்லவுள்ளனர் என இந்தியத் தூதரகத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

கடந்த மாதம் சார்க் மாநாட்டுக்காக இந்தியப் பிரதமர் இலங்கை வந்திருந்தபோது அவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் சந்தித்தனர். இதன்போது இந்தியாவுக்கு வருமாறு இந்தியப் (12ஆம் பக்கம் பார்க்க)

## பாண்டிச்சேரியில் விபத்து அராலியைச் சேர்ந்தவர் பலி

(சென்னை)

பாண்டிச்சேரியில் நடைபெற்ற வீதி விபத்தில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்ததுடன் ஐந்து பேர் படுகாயமடைந்துள்ளனர்.

திருமண ஏற்பாடுகள் செய்வதற்காக வானில் சென்றுகொண்டிருந்தபோது லொறியொன்றுடன் விபத்துக்குள்ளானதிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் அராலி வடக்கைச் சேர்ந்த சின்னப்பு தம்பித்துரை (வயது 62) என்ற குடும்பஸ்தர் ஸ்தலத்திலேயே பலியானர்.

சம்பவத்தில் பிரஸ்தாப குடும்பஸ்தரின் மகனான வெளி (12ஆம் பக்கம் பார்க்க)

# வன்னிக்குள் அழிவுகளை ஏற்படுத்தி மக்களை அகதிகளாக்குகிறது அரசு

## விடுதலைப் புலிகள் குற்றச்சாட்டு

(கிளிநொச்சி)

பீதிக்குள்ளாக வேண்டிய தேவை எமது மக்களுக்கில்லை. பீதி எதிரிக்கானது. எதிரியின் உளவியல் போருக்கு இரையாகாமல் உறுதியுடன் போராடுவோம் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

பீதி எமக்கானதல்ல. அது எதிரிக்கானது! என்ற தலைப்பில் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

வன்னிப் போரில் ஒரு நாசகாரத் திட்டத்தை நிறைவேற்றத் தமிழரின் விடுதலைப் போராட்டத்தைப் பூண்டோடு ஒழிக்க சிங்கள அரசு திட்டமிட்டுள்ளது.

வன்னிக்குள் அழிவுகளை விதைத்து, மக்களை அகதிக்ளாக விரட்டி, அவர்கள் மத்தியில் பீதியைக் கிளப்பிவிட்டு, இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் மக்களை உள்வாங்க மகிந்த அரசு விரும்புகின்றது.

கடந்த இரண்டு வருடமாக வன்னியில் நடக்கும் போரில் மக்களைச் சிறைப்பிடித்து அவர்களை விடுவிக்கப்பட்ட மக்களைப் போல் உலகிற்குக் காட்ட அரசு எடுத்த அனைத்து முயற்சிகளும் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஆலங்குளத்தில் முன் நகர்வு முறியடிப்பு 20 படையினர் பலி;25 பேர் படுகாயம்

(கிளிநொச்சி)

துணுக்காய் ஆலங்குளத்தில் படையினரின் பாரிய முன் நகர்வு தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது. இதில் 20 படையினர் கொல்லப்பட்டுள்ளனர். 25 பேர் காயமடைந்துள்ளனர்.

படையினரின் நான்கு சடலங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

துணுக்காய் ஆலங்குளம் பகுதியில் செறிவான எறிகணைச் சூட்டாதரவுடன் சிறிலங்கா படையினர் பாரிய எடுப்பில் நேற்று முற்பகல் 10 மணியளவில் முன் நகர்வினை மேற்கொண்டனர்.

இம் முன் நகர்வினை முறியடிக்கும் தாக்குதலை விடுதலைப் புலிகள் செறிவாக நடத்தினர்.

எறிகணைத் தாக்குதலை நடத்தியும் களத்தில் எதிர்த்தாக்குதலை தீவிரமாக நடத்தியும் படையினரின் (12ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத்துக்கு எதிரான போரை நிறுத்தப்போவதில்லை

### பிரதமர் அறிவிப்பு

(கொழும்பு)

எத்தகைய தடைகள் வந்தாலும் பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தத்தை நிறுத்தப் போவதில்லை என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.

கில்கிரியாகம உயர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே பிரதமர் இதனைக் கூறினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதமர், படையினர் வெற்றியை நோக்கி சென்று கொண்டிருக்கின்றனர். அவர்கள் வெற்றி பெறும்போது சிலர் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பில் கருத்து தெரிவிக்கின்றனர்.

நாட்டுக்குப் பொருத்தமற்ற செயற்றிட்டத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படுபவர்களும் வெளிநாட்டுத் தொண்டர் நிறுவனங்களிடமிருந்து உதவியைப் பெறும் சிலருமே இத்தகைய கருத்துக்களை தெரிவிப்பதாக பிரதமர் (12ஆம் பக்கம் பார்க்க)

## போருட் வாகனத்தின் மீது கிளைமோர் தாக்குதல்

(கிளிநொச்சி)

வவுனியாவில் உள்ள கனகராயன்குளம் பகுதியில் அனைத்துலக தொண்டு நிறுவனத்தின் போருட் வாகனத்தின் மீது படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் கிளைமோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கனகராயன்குளம் பகுதியில் உள்ள கண்டி வீதியில் சென்றுகொண்டிருந்த போருட் வாகனத்தின் மீது நேற்று இரவு 7.15 மணியளவில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.


இதில் போருட் ஊர்தி சேதமாகியுள்ளதுடன் அதன் ஓட்டுநரான ஆ.விசுவலிங்கம் என்பவர் காயமடைந்தார். (ச-5)

# புதுமுறிப்பு பகுதி மீது எறிகணை வீச்சு 2 குழந்தைகள் உட்பட ஐந்து பேர் பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி புதுமுறிப்பு பகுதியில் இடம்பெயர்ந்த மக்கள் மீது படையினர் நடத்திய எறிகணைத் தாக்குதலில் இரு குழந்தைகள் உட்பட ஐவர் பலியாகியுள்ளனர். மூவர் காயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

படையினரின் தாக்குதலால் இடம்பெயர்ந்து புதுமுறிப் (12ஆம் பக்கம் பார்க்க)



நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# வன்னியில் துன்பப்படும் மக்களை காப்பாற்ற நடவடிக்கை எடுங்கள்

## அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை

(கொழும்பு)

வன்னியில் அல்லல்படும் மக்களைக் காப்பாற்ற நடவடிக்கை எடுக்குமாறு அகில இலங்கை இந்து மாமன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

அரச தரப்பினர், அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள் உட்பட்ட அனைவரும் வன்னி மக்களை கொடுமையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என இந்து மாமன்றம் வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது; வன்னி, கிளிநொச்சி மாவட்டங்களில் தாய்மார்கள், குழந்தைகள் உட்பட ஆயிரக் கணக்கான மக்கள் தங்கள் சொந்த வசிப்பிடங்களையிழந்து மரங்களின் கீழும் திறந்த வெளியிடங்களிலும் தஞ்சமடைந்து உறைவிடம் தேட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அந்த அப்பாவிப் பொதுமக்கள் இடம் விட்டு இடம் அலைந்து திரிந்து தங்குமிடங்களைத் தேடும் அகதிகளாகத் தங்கள் சொந்த நாட்டிலேயே தவித்துக் கொண்டு பட்டினியால் வாடுவதுடன் மட்டுமன்றி மருந்து, மலசலகூட வசதிகள் முதலிய அடிப்படை அவசிய தேவைகள் கூட அவர்களுக்கு மறுக்கப்பட்ட நிலையில் அல்லல்படுகின்றனர்.

தொடர்ந்து நடக்கும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அப் பகுதிகளில் தேவையான குழந்தைகள் பால்மா, உணவு வகைகள், மருந்து வகைகள், மண்ணெண்ணெய் மற்றும் அவசிய பொருள்கள் வீடுகளில் எஞ்சியிருப்போருக்குக் கூட கிடைக்காத தட்டுப்பாட்டு நிலை நிலவுகின்றது.

அரசாங்கத்தினால் அனுப்பப்படும் உதவிகள் கூட அங்கிருக்கும் பல்வேறுபட்ட பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக மக்களைச் சென்றடையாத பரிதாப நிலையும் இளைய சமுதாயத்திற்குக் கல்வி கற்கும் வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் படும் வேதனைகள் சொல்லில் அடங்கா.

தொடரும் யுத்தத்தினால் முரண்பட்ட நிலையினாலும் 12 ஆயிரம் குடும்பங்கள் புதிதாக இடம்பெயர்ந்துள்ளதாக சுதந்திர அவதானிப்பு அறிக்கைகள் தெரிவிக்கும் அதேவேளை,

வன்னியில் 37 ஆயிரம் குடும்பங்கள் இடம்பெயர்ந்திருப்பதாகவும் 886 குடும்பங்களுக்கு அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று தற்சமயம் இட வசதியளிக்க முன்வந்தும் அதிலும் ஒரு பகுதியினருக்கு மட்டுமே இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சியில் சுமார் 2 ஆயிரத்து 800 குடும்பங்கள் தங்கள் வதிவிடங்களிலிருந்து வெளியேறி 22 பாடசாலைகளில் தஞ்சமடைந்து வாழ்கின்றார்கள்.

அதன் விளைவாக 25 ஆயிரம் மாணவர்களுக்குக் கல்வி கற்கும் வசதி மறுக்கப்பட்டுள்ளது. மன்னார், துணுக்காய், கிளிநொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் 100 பாடசாலைகளுக்கு மேல் யுத்த மோதல்கள் காரணமாக சொந்த இடங்களில் நடத்த முடியாது வேறு இடங்களுக்கு மாற்றப்பட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுதத் தகுதி பெற்றும் அவர்களுக்கு அந்த வாய்ப்பு யுத்தம் காரணமாக மறுக்கப்பட்டுள்ளது எனவும் மடுப் பகுதியில் க.பொ.த. உயர் தர வகுப்பு மாணவர்கள் 55 வீதமும் ஐந்தாம் ஆண்டு மாணவர்கள் 45 வீதமும் முறையே க.பொ.த. (உ/த) பரீட்சை, ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எழுத முடியவில்லையென வலயக் கல்வித் திணைக்களம் தெரிவித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யுனிசெவ் நிறுவன அறிக்கைப்படி, மடுவிலும் வவுனியாவிலும் 13 ஆயிரம் மாணவர்களின் கல்வி யுத்தம் காரணமாகத் தடைப்பட்டிருக்கின்றது. பல மாணவர்களின் உள, உடல் நிலைமைகள் இடம்பெயர்வுகள் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ளது என கிளிநொச்சி வைத்தியசாலை அத்தியட்சகர் சுட்டிக் காட்டியிருக்கின்றார்.

இப்படிப் பல வழிகளில் பொதுமக்கள் யுத்தம் காரணமாக வேதனைகளாலும் சோதனைகளாலும் அல்லலுறுகின்றனர். மேற் கூறப்பட்டவை எங்களுக்குக் கிடைத்த தகவல்களின் சாராம்சம்.

மேலும் பல பிரச்சினைகளால அப்பாவிப் பொதுமக்கள் வாடுகின்ற நிலை காணப்படுகின்றது. உலகில் மகிமை பெற்ற நான்கு முக்கிய சமயங்களான இந்து சமயம், பௌத்த மதம், இஸ்லாம், கிறிஸ்தவ சமயம் என்பன இந் நாட்டில் பின்பற்றப்படுகின்றன.

சகல சமயங்களும் அன்பின் அடிப்படையில் அமைந்தவை. உடன் பிறந்த சகோதர சகோதரிகள் கண்கலங்காது அன்பு காட்டப்பட வேண்டும் எனப் போதிப்பவை.

எனவே அரசாங்கத்திற்கும் சகல அரசியல் தலைவர்களுக்கும் சகல மதத் தலைவர்களுக்கும் வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் பாரெல்லாம் பரந்து வாழும் எமது சகோதர சகோதரிகளுக்கும் அப்பாவிப் பொதுமக்களை இந்தக் கொடுமையிலிருந்து காப்பாற்ற உடனடி நடவடிக்கை எடுக்குமாறு இந்த மனிதாபிமான வேண்டுகோளை பகிரங்கமாக விடுக்கின்றோம் என்றுள்ளது. (ச)

# வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வன்மைப் போட்டிகளின் முடிவுகள்

(வவுனியா)

**15 வயது ஆண்கள்:- 200 மீற்றர் ஓட்டம்**

முதலாம் இடம்:- கிறிஸ்ரி ரஞ்சன் மடொன் எல்விஸ் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி),

**400 மீற்றர் ஓட்டம்**

முதலாம் இடம்-தங்கவேல் திவாகர் (ஹாட்லிக் கல்லூரி),

**நீளம் பாய்தல்**

முதலாம் இடம்- தங்கராஜா மதுஷன் (மட்டுவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்), மூன்றாம் இடம்-கிருஷ்ணவசீகரன் திலக்ஷன் (மகாஜனாக் கல்லூரி),

**தட்டெறிதல்**

முதலாம் இடம்- குகதாஸ் மோசிகரன் (மகாஜனாக் கல்லூரி), இரண்டாம் இடம்- சர்வேஸ்வரன் கதீஸ்(ஹாட்லிக் கல்லூரி),

**100 மீற்றர் தடை தாண்டல்**

முதலாம் இடம்- கிறிஸ்ரி ரஞ்சன் மடொன் எல்விஸ் (சென். பற்றிக்ஸ் கல்லூரி),

**17 வயது ஆண்கள்-200 மீற்றர் ஓட்டம்**

முதலாம் இடம்-கிறிஸ்தோபர் ஜக்ஷன் (சென்.பற்றிக்ஸ் கல்லூரி), இரண்டாம் இடம்-கந்தசாமி நிரூஜன்(மீசாலை வீரசிங்கம் ம. வித்தியாலயம்),

**800 மீற்றர் ஓட்டம்**

முதலாம் இடம்-நடேசபிள்ளை மதிராஜ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி),

**உயரம் பாய்தல்**

முதலாம் இடம்-முருகதாஸ் கிருஷ்ணா (மகாஜனாக் கல்லூரி), இரண்டாம் இடம்-யோகேந்திரம் பிரசாத் (நெல்லியடி ம.ம. வித்தியாலயம்),

**முப்பாய்ச்சல்**

முதலாம் இடம்-சக்தியநந்தன் லபீசன் (மகாஜனாக் கல்லூரி),

**கோலூன்றிப் பாய்தல்**

முதலாம் இடம்-இராமச்சந்திரன் சிறிதர்ஷன் (தும்பளை சிவப்பிரகாச வித்தியாலயம்), மூன்றாம் இடம்-யோகீஸ்வரன் சண்டீபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி),

**தட்டெறிதல்**

இரண்டாம் இடம்-சிவலிங்கம் கரிதரன் (யாழ்.மத்திய கல்லூரி), மூன்றாம் இடம்- அரிபரநிதி அரிகரன் (நெல்லியடி ம.ம.வித்தியாலயம்),

**4X400 மீற்றர் அஞ்சல்**

முதலாம் இடம்- மானிப்பாய் இந்துக் கல்லூரி.

**11 வயதுப் பெண்கள் 100 மீற்றர் ஓட்டம்**

முதலாம் இடம் -பிரியதர்ஷினி அருள் ஞானசுந்தரம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),

**உயரம் பாய்தல்**

இரண்டாம் இடம்-பிரியங்கா முருகையா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),

**நீளம் பாய்தல்**

முதலாம் இடம்-பிரியதர்ஷினி அருள் ஞானசுந்தரம் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்-மேரி நிலக்ஷனா செபமாலை நாயகம் (இளவாலை கொன்வென்ட்),

**13 வயதுப் பெண்கள் 200 மீற்றர் ஓட்டம்**

இரண்டாம் இடம்-ரெசில்வி சர்ஜினி ஜேசுரட்ணம் (இளவர்லை கொன்வென்ட்), மூன்றாம் இடம்-ஜீவனா சிவராஜா (அத்தியார் இந்துக் கல்லூரி),

**உயரம் பாய்தல்**

முதலாம் இடம்-ஜோய்காருண்ஜா மகேந்திரன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), இரண்டாம் இடம்-சிந்துஜா மனோகரன் (மகாஜனாக் கல்லூரி).

**15வயதுப் பெண்கள் நீட்டி எறிதல்**

மூன்றாம் இடம்-ஜி.தர்ஷிகா (ஊரெழு கணேசா வித்தியாலயம்),

**100 மீற்றர் தடை தாண்டல்**

மூன்றாம் இடம் -ரம்மியா ரவீந்திரன் (சுண்டுக்குளி மக்ளிர் கல்லூரி),

**17 வயதுப் பெண்கள் 200 மீற்றர் ஓட்டம்**

இரண்டாம் இடம்-ஜக்சனா ரட்ணசிங்கம் (அருணோதயாக் கல்லூரி). மூன்றாம் இடம்-பகீரதி சுப்பிரமணியம் (இளவாலை கொன்வென்ட்),

**800 மீற்றர் ஓட்டம்**

முதலாம் இடம்-காவேரி இராஜதுரை (அருணோதயாக் கல்லூரி), மூன்றாம் இடம்-செல்வராஜீ சீவரட்ணம் (கச்சாய் ஜி.ரி.எம்.எஸ்.)

**100 மீற்றர் தடைதாண்டல்**

முதலாம் இடம்-மதுரா தர்மராஜன் (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி),

**கோலூன்றிப் பாய்தல்**

முதலாம் இடம்-தனுஜா சண்முகராஜா (அருணோதயாக் கல்லூரி),

**குண்டெறிதல்**

முதலாம் இடம்-கஜானி காசிலிங்கம் (மகாஜனாக் கல்லூரி),

**ஈட்டி எறிதல்**

முதலாம் இடம்-ஜசோதா சந்திரசேகரம் (வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்), மூன்றாம் இடம்-தர்மலா அழகேஸ்வரன் (மிருசுவில் ஜி.ரி.எம்.எஸ்.)

**4X400 அஞ்சல்**

முதலாம் இடம்- அருணோதயாக் கல்லூரி. (ச)

# திருகோணமலையில் கிளைமோர் மீட்பு

திருகோணமலை உப்புவெளிப் பகுதியில் அமைந்துள்ள நரசிங்க கோவிலுக்கு அருகாமையில் மரமொன்றில் பொருத்தப்பட்டிருந்த சக்தி வாய்ந்த கிளைமோர்க் குண்டு மீட்கப்பட்டுள்ளது.

இரண்டரைக் கிலோ கிராம் எடையுடைய கிளைமோர்க் குண்டொன்றே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளது. இந்து மக்கள் அதிகமாகச் சஞ்சரிக்கும் இந்தப் பிரதேசத்தில் புலிகள் குண்டுகளைப் பொருத்தி வைத்துள்ளதாகப் பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

குறித்த கிளைமோர்க் குண்டுடன் பல வெடிபொருள்களும் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)


## விற்பனைக்கு

ஜமுனாபாறி ஆட்டுக் கிடாய்கள் மூன்று விற்பனைக்கு உள்ளது. ஒவ்வொன்றும் 50 கிலோ எடைக்குக் கூடியது. தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

K.பரணி
புற்றளை,
புலோலி தெற்கு,
புலோலி.

(C-1488)

## பணிப் பெண் தேவை

யாழ்.மாநகர எல்லைக்குள் வசிக்கும் சுகதேகியான வயோதிப மாதுவைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகளைச் செய்வதற்குமான பொறுப்புக்கள் அற்ற 30-45 வயதிற்குட்பட்ட இரவு, பகல் தங்கக் கூடிய பணிப் பெண் தேவை. சுய விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல.1643
மே/பா வலம்புரி
இல.3, 2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

(1643)


# பஸ் விபத்தில் 18 பேர் காயம்

மாத்தளை, மடவல பகுதியில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 18 பேர் காயமடைந்துள்ளனர். நேற்றுப் பகல் 12.45 மணியளவில் இந்த விபத்து இடம்பெற்றதாக மடவலப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஜா்எல பகுதியிலிருந்து வைபவம் ஒன்றுக்காக மாத்தளைக்குச் சென்று கொண்டிருந்தவர்களே விபத்தில் சிக்கியுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மாத்தளைப் பகுதியில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பஸ் வண்டி வழுக்கிய நிலையில் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-3)

# எதிர்க்கட்சித் தலைவர் ரணிலை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில விக்கிரமசிங்க மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவின் தலைவர் மங்கள சமரவீர ஆகியோருக்கு நீதிமன்றில் ஆஜராகுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இரண்டு கட்சிகளுக்குமிடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையை ரத்துசெய்யுமாறு தாக்கல் செய்யப்பட்ட மனுவின் மீதான விசாரணைகளுக்காக இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த மனு மீதான விசாரணைகளுக்காக எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 18 ம் திகதி நீதிமன்றதில் ஆஜராகுமாறு கொழும்பு மாவட்ட நீதவான் சிசிர ரத்நாயக்க உத்தரவு பிறப்பித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சர் அநுர பெஸ்டியன், முன்னாள் மாகாண சபை உறுப்பினர் அனில் குமார ஜெயசிங்க ஆகியோரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள ரணில் விக்கிரமசிங்க மற்றும் மங்கள சமரவீர ஆகியோர் நீதிமன்றில் ஆஜராக வேண்டும் என நீதவான் உத்தரவிட்டுள்ளார். (இ)

## நினைவுப் பேருரையும் திருப்பலியும்

தரணி போற்றும் பேரறிஞர் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் 28ஆவது ஆண்டு நினைவுப் பேருரையும் திருப்பலியும் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு யாழ். அருள் ஆச்சிரமத்தில் நடைபெறும். இதனை கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம் ஒழுங்கு செய்துள்ளது. (ஓ)

## நீரிழிவு நோயாளர்களுக்கான மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் நீரிழிவு நோயாளர்களுக்கான குளிசை வகைகள் கையிருப்பில் இல்லை எனவும் கிளினிக்குக்கு வந்து வெளிக்கடைகளை நாடிச் செல்கின்றனர். வெளிக்கடைகளிலும் குளிசைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் அதிக விலைக்கு விற்கப்படுகிறது.

[illegible] ஆதார வைத்தியசாலைக்கு கிடைக்க வேண்டிய [illegible] கடன் மருந்துகள் இதுவரை பிராந்திய சுகாதாரசேவை பணிமனையிலிருந்து கிடைக்கவில்லை என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ஓ-19)

## தெய்வீக இசையரங்கு

இளங்கலைஞர் மன்றம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் ஆதரவுடன் நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் நடாத்தி வரும் தெய்வீக இசையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிமுதல் 6.30 மணிவரை "கலியுகவரதன்" நாட்டிய நிகழ்ச்சி நடைபெறும். இந்நிகழ்வில் பாட்டு எம்.தயாபரன், நட்டுவாங்கம் லி.அனிருத்தன், மிருதங்கம்- எஸ்.துரைராசா,வயலின்- ஏ.ஜெயராமன், ஹார்மோனியம்-என்.செல்வசந்திரன் ஆகியோர் பங்குபற்றுவார்கள். (ஓ)

## தெய்வீகத்தொடர் இசைப்பேருரை

நல்லூர்க் கந்தன் மஹோற்சவத்தை முன்னிட்டு நல்லூர்மேற்கு வீதி ஸ்ரீமுத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் கான கதாவாரிதி பிரம்மஸ்ரீ சி.வை.நித்தியானந்தசர்மா நிகழ்த்தி வரும் "கந்தபுராணம்" பற்றிய தெய்வீகத் தொடர் இசைப்பேருரையில் இன்று ஞாயிற்றுக்கிழமை "ஸ்ரீவள்ளி திருக்கல்யாணம்" எனும் தலைப்பில் இசைப் பேருரை நிகழ்த்துவார். (ஓ)

# உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு தகவல் தொழில்நுட்ப கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ். இளைஞர் கணனி சேவைகள் நிறுவனத்தினரால் (Youth Computer Services) வேலணை பிரதேச சபைக்குட்பட்ட வகையில் மாணவர்கள், பாடசாலைவிட்டு விலகியோருக்கான தகவல்தொழில்நுட்ப (Information Technology) கருத்தரங்கு நடாத்தப்பட உள்ளது.

இக்கருத்தரங்கு ஒருநாள் முழுவதுமாக முழுநேர பயிற்சிக் கருத்தரங்காக நடாத்தப்பட்டு குறிப்புக்கள் வழங்கப்படும் எனவும், இக் கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் கணனி ஆர்வலர்கள் எதிர்வரும் 3ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னராக வேலணைப் பிரதேச சபையில் பதிவினை மேற்கொண்டு பயன்பெறலாம் என பிரதேச சபை செயலாளர் கை. மகேந்திரலிங்கம் அறிவித்துள்ளார்.

கருத்தரங்கு முடிவில் எழுத்துப் பரீட்சை வைக்கப்பட்டு சிறந்த மாணவர்களுக்கு உள்ளூராட்சி வார இறுதி நாளில் பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இதேவேளை இளைஞர் கணனி சேவைகள் (YCS) நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட பெறுமதியான ICT மாணவர் கையேடு நூலினை ரூபாய் 100 செலுத்தி மானிய விலையில் பெற்றுக்கொள்ளவும் வழியமைக்கப்பட்டுள்ளது. (ஓ)

## விளையாட்டு விழா

(பருத்தித்துறை)

பருத்தித்துறை தும்பளை நாவலர் முன் பள்ளி வருடாந்த விளையாட்டு விழா முன் பள்ளி மைதானத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை திருமதி சுகணலினி விஜயரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிலே ஈறோவீல் நிறுவனப் பொறியியலாளர் பீ. ஜெயசீலன் பிரதம விருந்தினராகவும் யாழ்.பல்கலைக்கழக பேரவை உறுப்பினர் எம்.ஸ்ரீபதி சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்கின்றனர். (ஓ-52)

## பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

ஊரெழு-சக்திபுரம் காளியம்மன் ஆலயத்தில் 20ஆண்டுகளுக்குப் பின் நாளை திங்கட்கிழமை காலை 6.30 மணி முதல் 7.15 மணிவரையுமுள்ள சுபநேரத்தில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

இன்று ஞாயிற்றுக்கிழமை கிரியைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

கிரியைகள் பாலஸ்தாபன பிரதம குரு வேத ஞான சுரபி சிவஸ்ரீ கிருஸ்ண சோதீஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. (ஓ)

## பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வதிரி தமிழ் கல்விக் கழகத்தில் கல்வியாளர்களை கௌரவிக்கும் பாராட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு தேவரையாழி இந்துக் கல்லூரியில் கழக அதிபர் சீ. சாந்தநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் விழாவில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எம். நடராஜாசுந்தரம், சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி ரி. கலாமணி, கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன். தேவரையாழி இந்துக் கல்லூரி அதிபர் எம். குட்டித்தம்பி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந் நிகழ்வில் கொழும்பு பல்கலைக்கழக கலாநிதி மார்க்கண்டு கருணாநிதி, யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாகம் அம்பலம் புஸ்பநாதன், M.R.D.S திட்ட இணைப்பாளர் சோமசுந்தரம் கோகுலநாதன், ஞானாசாரியார் ஆசிரியை ராஜசேகரம் பிரபாபதி ஆகியோர் கௌரவிக்கப்படுவார்கள்.. (ஓ)

## சந்நிதியான் ஆச்சிரம ஆன்மீக நிகழ்வுகள்

(பருத்தித்துறை)

தொண்டமனாறு செல்வசந்நிதி ஆலயத்தின் வருடாந்த மகோற்சவத்தையொட்டி சந்நிதி ஆச்சிரமத்தில் நடைபெறவுள்ள ஆன்மீக நிகழ்ச்சிகளில் இன்று ஞாயிற்றுக் கிழமை 10.30 மணியளவில் வட பிராந்திய சாயி சமித்தி பஜனை கோஷ்டியின் பஜனை இடம் பெறும். (ஓ)

## ஞாபகார்த்த விழா

அமரர் தோழர் அம்பலவாணர் வயித்திலிங்கம் அவர்களின் 20ஆவது ஞாபகார்த்த விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வட்டுக்கோட்டை தொட்டக்காடு ஞானியர் கோவில் திருவாசக மண்டபத்தில் அராலி தெற்கு கிராம அபிவிருத்திச் சபை தலைவர் அ. சர்வானந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மௌன அஞ்சலி, புஸ்பாஞ்சலி, வரவேற்புரை, தலைமையுரை, என்பனவும் தொடர்ந்து சங்கானை சி.க.கூ. சங்கங்களின் பிராந்திய சபை தலைவர் வி. செல்வரத்தினம், வட்டுக்கோட்டை ஆரம்ப சுகாதார நிலைய அபிவிருத்திச் சங்க செயலாளர் இ.கு. சிவஞானம், பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாசாலை முன்னாள் அதிபர் கா.நடராசா, முன்னாள் வடமாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் வே.சிவராசா, எழுத்தாளர் ஐ.சாந்தன் ஆகியோர் கலந்து கொண்டு ஞாபகார்த்த உரை வழங்க உள்ளனர். அத்துடன் சுதாகரன் மோகனப் பிரியாவின் நடனமும், அராலி முருகமூர்த்தி வித்தியாசாலை மாணவர்களின் நாடகமும் இடம் பெற உள்ளது. (ஓ)

## அறிமுகவிழாவும் விளையாட்டு விழாவும்

கோட்டை இலங்கை வங்கிக் கிராம அறிமுக விழாவும், விளையாட்டு விழாவும் யாழ். இலங்கை வங்கி 2ஆம் மேற்தரக் கிளையின் அனுசரணையுடன் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு கொட்டடி, 6/1 மீனாட்சி அம்மன் வீதியில் கோட்டை மீனாட்சி அம்மன் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் திருமதி. ஜெயந்திரன் சகிலாதேவி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக இலங்கை வங்கி வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் பி.ஏ. அருமைநாயகம், கௌரவ விருந்தினராக இலங்கை வங்கி, வடபிராந்திய செயற்பாட்டு முகாமையாளர் ந.சிவரட்ணம், சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிரதேச செயலர் மரியதாசன் ஜெகூ, கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி. மாலினி பாஸ்கரன், கோட்டை (J/81) கிராம உத்தியோகத்தர் எஸ். மகாலிங்கம் ஆகியோர் கலந்துகொள்வார்கள். (ஓ)

## ஆளுமை வளர்ச்சி

நாளை முதல் சுவாமி விவேகானந்தரின் "ஞானதீபம்" நூலில் வெளியாகிய ஆளுமை வளர்ச்சி சம்பந்தமான கருத்துக்கள் வலம்புரி வாசகர்களுக்கு வழங்கப்பட உள்ளது. (ஓ)

# யாழ்.மாவட்டத்தில் வலைப்பந்தாட்ட வளர்ச்சிப் பின்னணி

(சென்றவாரத் தொடர்ச்சி)

1970 காலப்பகுதியில் பருத்தித்துறை மெதடிஸ்த கல்லூரி, வட இந்துக்கல்லூரி என்பனவும் வலைப்பந்தாட்டத்தில் முக்கிய இடத்தைப் பெறத் தொடங்கியது. இங்கும் அவர்களுடைய வளர்ச்சிக்கு பாடசாலை அதிபர்களதும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களினதும் ஒத்தழைப்புக் காரணமாக அமைந்தது. இவ்வாறு நகர்ப்புறப் பாடசாலைகள் தமது சிறப்பான திறமைகளை வெளிக்காட்டாமை இருப்பினும் தற்போது அநேகமாக எல்லாப் பாடசாலைகளும் தமது திறமைகளை வெளிக்காட்டி வருகின்றன. சண்டிலிப்பாய் மகாவித்தியாலயத்தைப் பொறுத்தவரை கடந்த 5 வருடங்களாக வலைப்பந்தாட்டத்தில் மிகவும் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது. இப்பாடசாலையானது தேசிய மட்டப் போட்டிகளிலும் பங்குபற்றுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த சில வருடங்கள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, இராமநாதன் கல்லூரி, சண்டிலிப்பாய் மகா வித்தியாலயம் போன்ற பாடசாலைகள் வலைப்பந்தாட்டத்தில் மிகவும் சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது.

யூனியன் கல்லூரியானது யாழ்ப்பாணப் பாடசாலை அணிகளிலே மிகவும் சிறப்பான அணியாக விளங்குகின்றது. இப் பாடசாலையின் வலைப்பந்தாட்ட வளர்ச்சிக்கு பாடசாலையின் அதிபர், ஆசிரியர்களின் ஊக்குவிப்பே முக்கிய காரணமாக அமைகின்றது. இப் பாடசாலை அணியானது 2005ஆம் ஆண்டு இடம்பெற்ற தேசிய மட்டப் போட்டியில் பங்குபற்றி 3ஆம் இடத்தைப் பெற்றது. இப் பாடசாலையைச் சேர்ந்த மைதிலி ராஜரட்ணம் என்ற மாணவி சிறந்த களத் தடுப்பு வீராங்கனையாகத் தெரிவு செய்யப்பட்டு அவுஸ்திரேலியா சென்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு யாழ். மாவட்ட ரீதியில் நடாத்தப்படும் போட்டிகளினால் யாழ்.மாவட்ட விளையாட்டு வீராங்கனைகள் தேசிய அணியிலும் அங்கம் வகிக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளது. நித்தியா ராஜரட்ணம், தர்ஷினி ராஜரட்ணம் ஆகிய இரு வீராங்கனைகள் தேசிய அணியில் இடம் பிடித்துள்ளனர். அத்துடன் தேசிய வலைப்பந்தாட்ட தெரிவுக் குழுவில் நிஷாந்தினி நாகரட்ணம் இடம்பிடித்துள்ளார். இவ்வாறு யாழ். அணி வீராங்கனைகள் இலங்கையை விட்டு வேறு தேசத்திற்கும் சென்று தமது திறமைகளை வெளிப்படுத்துகின்றனர்.



இருந்த போதிலும் சிறப்பாக பயிற்றப்பட்ட போதிய பயிற்றுவிப்பாளர்கள் இன்மையும், போதிய ஊட்டச்சத்துள்ள உணவு கிடைக்காமையாலும் வீராங்கனைகள் தமது உச்ச அளவிலான திறமையை வெளிக்காட்ட முடியாத நிலை தோன்றியுள்ளது. ஆனாலும் தமக்கு கிடைக்கும் குறைந்தளவான வளங்களை உபயோகித்து தமது திறமைகளை உச்ச அளவில் வெளிப்படுத்த முனைகின்றனர்.

மேலும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் தவிர்ந்த யாழ்.மாவட்டத்தில் காணப்படுகின்ற கழகங்கள் தம்மிடத்தே வலைப்பந்தாட்ட அணியை வைத்திருகின்றன. இதிலும் பிரதேச ரீதியாக நோக்குகின்ற போது கரையோரப் பகுதிகளிலும், வலிகாமப் பகுதியில் குறித்த சில இடங்களிலும் தான் இது வளர்ந்திருக்கின்றது.

கரையோரப் பகுதிக ளான நவாந்துறை, குருநகர், பாசையூர், அரியாலையிலும் வலிகாமப் பகுதிகளான சண்டிலிப்பாய், தெல்லிப்பளை அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் தான் இது வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. இங்கு பாட சாலையை விட்டு விலகிய பின்னர் தமது பகுதியில் இருக்கும் கழகங்களுடன் இணைந்து கொள்ளும் பெண்கள் ஊடாக வலைப்பந்தாட்ட அணிகள் பேணப்பட்டு பின்னர் விளையாட்டு அமைச்சினால் அப்பகுதிகளில் நடாத்தப்படும் வலைப்பந்தாட்ட போட் டிகளில் தெரிவாகி தொடர்ந்து மாவட்ட மட்டத் திற்கு வருகின்றனர்.

இங்கு ஒவ்வொரு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகட்கும் ஒவ்வொரு விளையாட்டு உத்தியோகத்தர் இருப்பார். அவர் தனது பகுதிக்குரிய விளையாட்டுத்துறைப் பொறுப்பாக இருப்பார். சண்டிலிப்பாய் மகாவித்தியாலயம், மகாஜனாக்கல்லூரி, உடுவில் மகளிர்கல்லூரி போன்ற பாடசாலைகளில் வலைப்பந்தாட்டத்தைப் பயின்று கொண்டவர்கள் இங்குள்ள விளையாட்டு உத்தியோகத்தர்களால் சிறப்பாக பயிற்றப்பட்டு, மாவட்டத்தில் முன்னணி வகிக்கின்றனர். கரையோரப் பகுதிகளை பொறுத்தவரை அங்கு கழகங்கள் தமது முயற்சி மூலம் சிறப்பாக செயற்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு திட்டமிட்டு ஒழுங்கமைக்கப்பட்டு வளர்ந்து வரும் வலைப்பந்தாட்டமானது இன்று நாட்டின் போரியல் சூழல் காரணமாக பின் தள்ளப்பட்டிருப்பதனை நாம் அவதானிக்கலாம்.

**செல்வி. பிரதீபா செல்லத்துரை**
முதலாம் வருட மாணவி
விளையாட்டு விஞ்ஞான அலகு
யாழ். பல்கலைக்கழகம்

குறிப்பாக போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக வீராங்கனைகள் வெளி இடத்திற்குச் சென்று தமது திறமைகளை வெளிக்காட்ட முடியாத நிலை காணப்படுகின்றது. போக்குவரத்து அசௌகரியங்கள் காரணமாக போட்டிகளில் தமது திறமைகளை சரியான முறையில் வெளிக்காட்ட முடியாத நிலையும் காணப்படுகிறது. இவ்வாறு வலைப்பந்தாட்டத்தில் சாதனை எதனையும் சாதிக்க முடியாது.

தற்போது வலைப்பந்தாட்டமானது யாழ். மாவட்டத்திற்குள் முடங்கிக் கிடப்பதனை நாம் அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

# சம்பளத்தை உயர்த்தினார் ப்ரியாமணி



நடிகை ப்ரியாமணி தனது சம்பளத்தை உயர்த்தி விட்டார். இவர் பருத்திவீரன் படத்துக்கு முன்பு ரூ 15 முதல் 20இலட்சங்கள் சம்பளம் வாங்கி வந்தார்.

பருத்திவீரன் வெற்றிக்குப் பின்னர் ஏதோ தன்னால்தான் பருத்திவீரன் படமே ஹிட்ஆனது என்பதுபோல சம்பளத்தை ரூ .25 இலட்சம் முதல் ரூ.30 இலட்சம் வரை உயர்த்தினார்.

அந்தப் படத்துக்காக தேசிய விருது வாங்கியதும், தனது சம்பளத்தை ரூ.40 இலட்சம் முதல் ரூ.50 இலட்சமாக உயர்த்திவிட்டார் அம்மணி. இதனால் அம்மணியைத் தேடிச் செல்லவிருந்த பட வாய்ப்புக்களும் வேறு திசை நோக்கி சென்றுவிட்டதாம்.



படிக்காதவனில் தனுஷ்- தமன்னா

# த்ரிஷாவின் பொலிஸி



ரஜினி, கமல் தொடங்கி அஜீத், விஜய், விக்ரம் வரை ஒரு லிஸ்ட் வைத்திருக்கிறார் த்ரிஷா.

இதற்கு அடுத்த தகுதியில் உள்ள ஹீரோக்களின் படங்களில் நடிப்பதில்லை என்பது அவரது பொலிஸி. தொழில் வேறு, நட்பு வேறு என்ற த்ரிஷாவின் கொள்கையை சீண்டி, சிராய்ப்பு ஏற்படுத்திக் கொண்டிருக்கிறார் பரத். மோசர்பியர் நிறுவனம் தயாரிக்கும் புதிய படத்தில் நடிக்க ஒப்பந்தம் ஆகியிருக்கும் பரத்துக்கு ஜோடியாக நடிக்க த்ரிஷாவை அணுகினார்களாம். ஆனால் பரத்துடன் நடிக்க விருப்பமில்லை என்பதை வெளிப்படையாகவே அறிவித்துவிட்டாராம் த்ரிஷா. நிறைய கமிட்மென்ட் இருக்கு என்று இந்த மறுப்புக்கு அவர் காரணம் சொன்னாலும், உண்மை காரணம் மேற்படி கொள்கை தான்.

இதற்கிடையில் மர்மயோகி படத்தில் நடிக்க த்ரிஷாவை கேட்டிருக்கிறார்களாம்.

# 'வைஜெயந்தி ஐ.பி.எஸ்' ரீமேக்கில் ஸ்னேகா



எண்பதுகளில் விஜய சாந்தி அதிரடி அக்ஷன் நாயகியாக நடித்து சக்கை போடு போட்ட படம் வைஜெயந்தி ஐ.பி.எஸ் இந்தப் படத்துக்காக தேசிய விருதெல்லாம் வாங்கினார் விஜய சாந்தி.

ரீமேக் கலாசாரம் கொடி கட்டிப் பறக்கும் இந்த சூழலில் இந்தப் படத்தை ரீமேக் செய்ய நிறையப் பேர் முயற்சிகள் எடுத்தனர்.

இப்போது ஒரிஜினல் வைஜெயந்தி ஐ.பி.எஸ் படத்தை இயக்குநர் ஆர்த்திகுமார் ரீ மேக் செய்கிறார். இவர் சத்யராஜை வைத்து ஏற்கெனவே சவுண்டு பார்ட்டி என்ற படத்தை எடுத்தார். இந்த ரீ மேக்கில் எந்த நாயகியை ஹீரோயினாகப் போடலாம் என யோசித்த ஆர்த்தி குமாரின் மனதில் பளிச்சென்று தோன்றியவர் புன்னகை இளவரசி ஸ்னேகாதானாம்.

விஷயம் கேள்விப்பட்டதும் சந்தோஷத்தில் துள்ளிய ஸ்னேகா உடனடியாக தனது கால்ஷீட்டுகளை அள்ளி வழங்கிவிட்டாராம். இந்தப் படம் தமிழ் , தெலுங்கு இரு மொழிகளிலும் தயாராகிறது.

# விநய் நடிக்கும் நூற்றுக்கு நூறு






உன்னாலே உன்னாலே படத்தின் மூலம் தமிழ் திரையுலகிற்கு அறிமுகமானவர் நடிகர் விநய். இந்தப் படத்தை தொடர்ந்து அவருக்கு ஜெயம் கொண்டான் படத்தின் வாய்ப்புக் கிடைத்தது.

இந்தப் படம் ரீலிஸ் ஆகவுள்ள நிலையில், டைரக்டர் சரண் இயக்கத்தில் உருவாகி வரும் ''மோதி விளையாடு'' படத்தில் நடித்து வருகிறார் விநய். இதற்கிடையில் அவருக்கு அடுத்து ஒரு படவாய்ப்பும் கிடைத்திருக்கிறது. டைரக்டர் செல்வா இயக்கத்தில் உருவாகவுள்ள நூற்றுக்கு நூறு படத்தில் நடிக்க விநய் ஒப்பந்தமாகியிருக்கிறார். இந்தப் படத்தை கவிதாலயா நிறுவனம் தாயாரிக்கிறது.

# மீண்டும் இணையும் ஹரி- சூர்யா



ஜில்லுன்னு ஒரு காதல், பருத்தி வீரன் ஆகிய படங்களை தயாரித்த கே.ஈ.ஞானவேல் ராஜா தனது ஸ்டுடியோ கிரீன் நிறுவனம் சார்பில். மூன்றாவது தயாரிப்பை தொடங்கு கிறார்.

இந்த படத்துக்கு 'சிங்கம்' என்று பெயர் சூட்டப்பட்டுள்ளது. வேல். ஆறு ஆகிய இரண்டு வெற்றி படங்களை அடுத்து சூர்யாவும் இயக்குநர் ஹரியும் மீண்டும் இணையும் படம் இது.

படத்தின் கதாநாயகி மற்றும் நடிகர்-நடிகைகள் தேர்வு நடைபெறுகிறது. ரிலையன்ஸ் பிக் பிக்சர்ஸ், முதன் முதலாக தென்னிந்திய திலையுலகில் இந்தப் படத்தின் மூலம் நுழைகிறது.

இந்த நிறுவனம் ஸ்டுடியோ. கிரீன் நிறுவனத்துடன் இணைந்து அடுத்த ஆண்டு பெப்பரவரி மாதம் இன்னொரு பிரமாண்டமான படத்தைத் தொடங்குகிறது.

இப் படத்தில் 'பருத்தி வீரன்' கார்த்தி நாயகனாக நடிக்கிறார். தலைநகரம், மருதமலை ஆகிய படங்களை இயக்கிய சுராஜ் டைரக்டு செய்கிறார்.

# சினி விமர்சனம்

நட்சத்திரங்கள் - ரித்திஷ், சங்கீதா, கீர்த்திசாவ்லா, ஆனந்தராஜ், ஸ்ரீமன்,ராதாரவி
இயக்கம்- சரவணசக்தி




ஆங்கிலப் படமான செல்லுலர் கதையைப் போன்ற ஒரு கதை. சரியான விகிதத்தில் உப்பு, காரம், மசாலா சேர்த்து ருசியாக பரிமாறியிருக்கிறார் புதுமுக இயக்குநர் சரவண சக்தி.

நாயகன் படத்தின் நாயகன் ரித்திஷ் கண்டிப்பான பொலிஸ் அதிகாரி. ஒரு டி.ஜி.பியின் வளர்ப்பு மகன். சிறுவயதில் இருந்தே பொலிஸ் வாடையுடன் வளர்ந்ததால் தவறு நடந்தால் அதனை தட்டிக் கேட்க தயங்கக் கூடாது என்பது புரிந்துகொள்கிறார்.

கண் முன்னே நடக்கும் அநியாயங்களை துணிச்சலுடன் தட்டிக் கேட்டு, தட்டியெடுக்கிறார்.

அதிரடி நாயகனாக களமிறங்கும் ரித்திஷுக்கு சவாலாக அமைகிறது ஒருகேஸ். நகரின் அடுத்தடுத்து இளம் பெண்கள் மாயமாகும் மர்மத்துக்கு காரணம் என்ன என்று கண்டுபிடிக்க சவாலுடன் களமிறங்குகிறார்.

போதை மருந்து கடத்தும் கும்பல்தான் இதற்குக் காரணம் என தெரியவர.. அந்தக் கும்பலைப் பிடிக்க ரித்திஷ் தீட்டும் திட்டங்களும் ,அடுத்தடுத்து நடக்கும் அதிரடி திருப்பங்களும் தான் நாயகன் படத்தின் கதை.

படத்துக்கு வலு சேர்க்கும் கேரக்டர்களில் ஒன்று ரமணாவின் சக்தி கேரக்டர். கடத்தப்பட்ட பெண்ணைக் காப்பாற்ற அவர் எடுக்கும் முயற்சிகளும், ஆக்ஷன் அவதாரமும் சபாஷ் போட வைக்கிறது. அவரோடு இணைந்து இரட்டைக் குழல் துப்பாக்கி போல ரித்திஷும் தன் பங்குக்கு அக்ஷனில் புகுந்து விளையாடியிருக்கிறார். தான் உண்மையிலேயே நாயகன் என்பதை நிரூபித்திருக்கிறார் நடிகர் ரித்திஷ்.

டாக்டர் சந்தியாவாக வரும் சங்கீதா கதையை விறுவிறுப்பாக நடத்த உதவியிருக்கிறார். கீர்த்தி சாவ்லாவை இன்னும் கொஞ்சம் பயன்படுத்தியிருக்கலாம். வில்லனாக வரும் ஆனந்தராஜ் இரட்டை வேடத்தில் அசத்தி யிருக்கிறார். ஸ்ரீமன் ,ராதாரவி என அனைத்து கேரக்டர்களுமே தங்கள் பங்குக்கு நடிப்பு திறனை வெளிப்படுத்தி நடித்திருக்கிறார்கள். பாடல்கள் கும்மாங்குத்து.

# நயன்தாரா நடிக்கும் சூரியமுகி



''தமிழ் திரையுலகில் நம்பர்வன் நடிகையான நயன்தாராசூரியமுகி என்ற படத்தில் நடித்து வருகிறார். மலையாளத்தில் பாசில் இயக்கத்தில் நயன்தாராவும், மோகன்லாலும் நடித்து சுமாராக ஓடிய படம் ''விஷ்மயதம் பத்து''

நயன்தாராவுக்கு முக்கியத்துவம் கொடுத்து எடுக்கப்பட்ட இப் படம் இப்போது, தெலுங்கில் சூரியமுகியாக மொழிமாற்றம் செய்யப்படுகிறது. தற்போது தெலுங்கு ரசிகர்களிடையே நயன்தாராவுக்கு மவுசு இருப்பதால் பழைய படம் டப் செய்யப்படுகிறது. இந்தப் படம் தமிழிலும் சூரியமுகி என்ற பெயரிலேயே வெளியிடப்பட உள்ளதாம்.

# நோத் முதல் கோபல்லவா வரை 84



**சேர் முத்துக்குமாரசுவாமி அவர்கள்**

அவர் கண்டி மக்கள் விவாகம் சம்பந்தமாகப் பொதுமக்கள் விரும்பாத தன்மையில் எழுந்த ஒரு கட்டளைச் சட்டத்தையும், கிராமச் சபை சம்பந்தமான ஒரு கட்டளைச் சட்டத்தையும், இராணி அப்புக்காத்து உத்தியோகம் பார்த்துக்கொண்டே தனித்தொழில் நடத்தும் அனுமதியையும் வெகுவாக எதிர்த்துப் பேசினார். மேலும் ஒருமுறை சட்டசபையின் வைகற் காலத்தை மூன்று மாத எல்லையில் தரிப்பிட முனைந்த ஆள்பதி அவர்களின் அடாத செயலை ஆணித்தரமாகக் கண்டித்தார். ''நாங்கள் சட்டசபை அங்கத்தவர் என்றதால் இங்கே கூடுவது சட்டங்கள் செய்வதற்கு மாத்திரமல்ல நாட்டின் முன்னேற்றத்து[illegible]களைச் செய்ய முயற்சிப்பதற்காகவும் இங்கே வந்துள்ளோம் என்பதை மறந்து விடலாகாது. நாட்டுக்குச் சேவை செய்யும் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு மூன்று மாதகாலம் போதாது. ஜனநாயக ஆட்சி என்றும் மக்கள் சபை என்றும் தாராள மனப்பான்மை என்றும் பெருமையடிக்கும் ஆங்கிலேயரின் ஆட்சி முறைக்கு இது முரணான செயலாகும்'' என்பது அவர் பேச்சின் சுருக்கமாகும்.

சேர். முத்துக்குமாரசுவாமியவர்கள் மொழிப் புலமை, சொற்சிறப்பு, சொல்வன சொல்லுவதற்கு அஞ்சாமை, நேர்மை, தியாகம் என்னும் பல பண்புகளுக்காகப் பெயர் பெற்றவர் சட்டசபை அங்கத்தவர்களுக்கு அவர் ஓர் எடுத்துக்காட்டாகவும் உதாரணமாகவும் விளங்கினார் என்ப. முத்துக் குமாரசுவாமியவர்கள் இராசாங்க ஆசிய அங்கத்தின் இலங்கைக் கிளையில்

**மீள் பார்வை**

அங்கத்தவராயிருந்து அளப்பரிய சேவை செய்தார். இச்சங்கம் வெளியிட்ட சஞ்சிகை மலர்களில் காலத்துக்குக் காலம் கீழைத் தேசக் கல்வி, கலாசாரம், மதம் என்பன சம்பந்தமான அரிய கட்டுரைகளை எழுதி வந்தார். அவற்றோடு ஆங்கிலத்தில் அரிச்சந்திரன் முதலிய பல நூல்களையும் தாயுமான சுவாமிகளின் அரிய பாடல்களை மொழி பெயர்த்தும் தொண்டு செய்தார்.

முத்துக்குமாரசுவாமியவர்கள் சட்டசபையில் அங்கத்துவம் வகித்த காலத்தில் 1862 ஆம் ஆண்டில் இங்கிலாந்துக்குச் சென்றார். அங்கே படித்தவர்கள் மத்தியில் கீழைத்தேசக் கலாசாரம், சைவசமயத்தின் மகத்துவம், அரிச்சந்திரன் வரலாறு, உண்மையின் உயர்வு என்பன போன்ற பொருள் பற்றிப் பேசினார். அக்காலத்திலே தான் அவர் முன்னர் ஆசியாக் கண்டத்தினர் எவராயினும் பெறாததும், கிறிஸ்தவரல்லாதார் சேர முடியாததுமான சீமை அப்புக்காத்து என்னும் பாரிஸ்டர் பதவியைப் பெற்று, ''லிங்கன் இன்'' என்ற பாரிஸ்டர் கழகத்துக்கே பெருமை தேடிக் கொடுத்தார். அவருடைய முன் மாதிரியைக் கொண்டே இந்தியர் பலர் நாளடைவில் பாரிஸ்டர் பட்டம் பெறுவாராயினர்.

முத்துக்குமாரசுவாமியவர்கள் கீழைத் தேசத்தின் முதலாவது பாரிஸ்டர் என்ற தகுதியைப் பெற்றபோது லண்டனில் பிரசுரமான ரைம்ஸ் பத்திரிகை அவரை வெகுவாகப் பாராட்டிக் கௌரவித்தது. "இந்துப் பிரபுக்கள் பாரம்பரியம் முன்னேற்றமடைவதற்கு அறிகுறியாக 'லிங்கன்' இன் என்னும் கழகத்தில் சேர்வதற்குக் கீழைத்தேசத்துப் பெருமகனார் ஒருவர் தெரியப் பெற்றது மகிழ்ச்சிக்குரியதாகும். இப்பெரியார் இலங்கைச் சட்ட சபையில் தமிழர் பிரதிநிதியாய் அங்கம் வகிக்கின்றார். இவர் இக் கழகத்தில் சேர்ந்தமையால் இந்தியர் இனிமேல் சோம்பேறிகளாய் இருக்கமாட்டார்கள்'' என அப் பத்திரிகை எழுதிற்று.

முத்துக்குமாரசுவாமி அவர்கள் இங்கிலாந்திலே இருந்த காலத்திலே இலங்கைச் சட்டசபையிலே பெரிய அமளிகள் ஏற்படலாயின. ஆள்பதி மக்காதி அவர்கள் சென்று, ஆள்பதி றொபின்சன் அவர்கள் வருவதற்கு இடைப் பட்ட காலம் அது. அக்காலத்திலே மேஜர் ஓபிறைன் பதில் ஆள்பதியாகக் கடமையாற்றினார். முத்துக்குமாரசுவாமி அவர்கள் இங்கிலாந்தில் இருந்தாராகையால் அவருக்காக யோண் ஈற்றன் என்ற பறங்கியர் பதில் அங்கத்தவராய் இருந்தார். அக்காலத்திலே தான் 17.08.1864 இல் கூடிய சட்டசபைக் கூட்டத்திலே அரசாங்கத்துக்கு எதிராகப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

**க.சி.குலரத்தினம்**

அடுத்த கூட்டத்தில் ''குடியேற்ற நாட்டுப் படைச் செலவைக் குடியேற்ற நாடுகளே பொறுத்துக் கொள்ளவேணடும். படைச்செலவுக்கு ஒதுக்கிய பணத்தின் மிச்சமிருந்தால் அத் தொகை திறைசேரியில் ஈட்டப்பட வேண்டுமேயல்லாமல் பொதுசன உபயோகத்துக்காக ஒதுக்கப்படலாகாது'' என்று குடியேற்ற நாட்டு மந்திரி வரைந்தனுப்பிய சட்டமொன்று சட்டசபையில் உத்தியோக அங்கத்தவர் தவறாது சமுகமளிக்க நிறைவேற்றப்பட்டது. இதைத் தொடர்ந்து சபையிலிருந்த ஆறு உத்தியோகப்பற்றற்ற அங்கத்தவரும் 15.10.1864 இல் சபையை விலகல் செய்தார்கள். (தொடரும்)





தேசிய சேமிப்பு வங்கி, சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ் என்பவற்றின் ஆதரவில் காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரியில் நீண்டகாலம் சேவையாற்றிய அதிபர்,ஆசிரியர்கள் மற்றும் க.பொ.த.சாதாரண தரத்தில் சிறப்புச் சித்திபெற்றவர்களிற்கான பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக கலந்துகொண்ட வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளையும் பாரியாரும் மற்றும் பேராசிரியர் தர்மரட்ணம்,சிவகணேசன் ரெக்ஸ் உரிமையாளர் க.அருள்நேசன்,சேமிப்பு வங்கி முகாமையாளர் எம். அருளானந்தம், உடுவில் பிரதேச செயலர் அ.சோதிநாதன் உள்ளிட்ட அதிபர் ஆசிரியர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்படுவதனையும்,பிரதம விருந்தினர் கல்லூரி அதிபர் ந.பரமசிவத்திற்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவதனையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# இருபதாம் நூற்றாண்டு 7

# ஈழத்தமிழ் இலக்கியம்

1950களின் இறுதியில் ஈழத்து இலக்கியம் தேசிய உணர்வுடன் இணையலாயிற்று இக்காலகட்டத்தில் கசின் என்ற புனை பெயருடைய க.சிவ குருநாதன் பல நாவல்களையும் குறுநாவல்களையும் எழுதியுள்ளார். வ.அ. இராசரத்தினம் ''கொழு கொம்பு'' என்னும் நாவலை எழுதியுள்ளார்.



மலையக மக்களின் அவல வாழ்க்கையைப் பொருளாகக்,கொண்டு சி.வி. வேலுப்பிள்ளை ''வீடற்றவன்'', ''வாழ்வற்ற வாழ்வு'' ஆகிய நாவல்களையும் எழுதியுள்ளார். செ. சிவ ஞானசுந்தரம் (நந்தி) எழுதிய ''மலைக் கொழுந்து'' (1962) என்ற நாவலும் இத்தகையதே. க.சொக்கலிங்கம் (சொக்கன்) ''மலர்ப்பலி'' (1949) ''செல்லும் வழி இருட்டு'' (1961) என இரு நாவல்களை எழுதியுள்ளார்.

இக் காலகட்டத்தில் ஈழத்தமிழ் நாவலின் போக்கில் ஒரு புதிய வளர்ச்சியை ஏற்படுத்திய இளங்கீரன் குறிப்பிடத்தக்கவர். ஏறத்தாழ 20 நாவல்களை எழுதியுள்ளார். தேசிய உணர்வையும் சமூகச் சிக்கல்களையும் நாவல்களில் எடுத்துக்காட்டிய இவர் இக்கால் கட்டத்தில் தனித்துவச் சிறப்புப் பெறுகிறார். ஈழத்தைக் கதைக்களமாகக் கொண்டு இவரெழுதிய நாவல்கள் தொடர் நாவல்களாக எழுதப்பட்டுப் பின்னர் நூல் வடிவம் பெற்றவையாகும். அவை வருமாறு ''தென்றலும் புயலும்'' (1955), ''நீதியே நீ கேள்'' (1959) ''புயல் அடங்குமா?'' (1954), ''சொர்க்கம் எங்கே?'' (1955) , ''மனிதர்கள்'' (1990) ''இங்கிருந்து எங்கே?'' (1961), ''காலம் மாறுகிறது'' (1964), ''மண்ணில் விளைந்தவர்கள்'' (1960) ,''அவருக்கு ஒரு வேலை வேண்டும்'' (1972).

இக் காலகட்டத்தில் சில பரிசோதனை முயற்சிகளும் நடைபெற்றுள்ளன. ''மத்தாப்பு'', 'தீ' என்னுமிரு நாவல்களையும் எடுத்துக்காட்டாக காட்டலாம். ''மத்தாப்பு'' க. வேலுப்பிள்ளை, கனகசெந்திநாதன், இ. நாகராஜன், , குறமகன் (இ. வள்ளிநாயகி) எஸ். பொன்னுத்துரை என்னும் ஐவராலும் எழுதப்பட்டது.

'தீ' எஸ்.பொன்னுத்துரையால் எழுதப்பட்டது. 'தீ' கதையும் உத்திமுறையில் வித்தியாசமானது. அனுபவங்களை மீளப் பார்க்கும் நனவோடை உத்தி இந் நாவலில் கையாளப்பட்டுள்ளது. இந் நாவலாசிரியர்களில் பலர் சிறுகதை எழுதிய அனுபவத்துடன் நாவல் எழுதியவர்கள் தமிழ்நாட்டு இலக்கியப் போக்குடன் இணைந்து எழுதியவர்களாவர். ஆசையினால் தூண்டப் பெற்று எழுதியவர்கள் க. தி. சம்பந்தனின் 'பாசம்' இத்தகைய பண்பைக் கொண்டுள்ளது.

1956 ஆம் ஆண்டில் ஈழத்திலேற்பட்ட அரசியல் மாற்றம் தாழ்த்தப்பட்டோரின் உரிமைக் குரல் வலுப்பெறல் வர்க்கச் சிந்தனை என்பவற்றால் கிராமங்களிலே மாற்றங்கள் ஏற்பட்டன. இத்தகைய சூழ்நிலையில் செ.கணேசலிங்கனின் ''நீண்ட பயணம்'', ''சடங்கு'', ''போர்க்கோலம்'' ஆகிய நூல்கள் எழுந்தன. வேளாளரின் அடக்குமுறைக் கொடுமைகள், ஆலயப் பிரவேச முயற்சி தொடர்பான போராட்டம் என்பவற்றை நீண்ட பயணமும் போர்க் கோலமும் காட்டுகின்றன. மாறிவரும் சமூக நிலைமையையும் ஆசிரியர் தொட்டுச் செல்கிறார். கே. டானியலின் ''பஞ்சமர்'' (1972) பஞ்சப் பட்ட மக்களின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் பேரோவியம் என்ற பாராட்டைப் பெற்றது. தெணியானின் ''விடிவை நோக்கி'' (1973) சொக்கன்எழுதிய ''சீதா'' (1963) என்பவையும் சாதிப் பிரச்சினை தொடர்பானவை. செங்கை ஆழியானின் ''பிரளயம்'' (1975) உயர்சாதிக் கொடுமைகளைச் சித்திரிக்கிறது. இது ஒரு பிரதேசத்துச் சித்திரமாகவும் சமுதாய விமர்சன நாவலாகவும் அமைந்துள்ளது. தி. ஞானசேகரன் எழுதிய ''புதிய சுவடுகள்'' (1977) நாவல் யாழ்ப்பாணப் பிரதேசக் கிராமம் ஒன்றை அதன் வெளிப்புறத்தை சித்திரிக்கின்றது. எ.ரி. நித்தியகீர்த்தியின் ''மீட்டாதவீணை'' (1974) என்ற நாவலும் யாழ்ப்பாணக் கிராமம் ஒன்றின் சமூக மாந்தரை அவர்களது இயல்பான குணங்களுடன் காட்டியுள்ளது. ஞானரதனின் ''ஊமை உள்ளங்கள்'' (1976) பொருளாதாரச் சிக்கலால் காதலுணர்வு அடக்கப்படும் நிலையைச் சுட்டிக்காட்டுகிறது.

தனிமனித உணர்வுகளைப் பொருளாதாரப் பகைப்புலத்திலே வைத்துக் காட்டும் நாவல்களும் குறுநாவல்களும் இக்காலப் பகுதியில் எழுதப்பட்டுள்ளன. மணிவாணனின் ''யுகசந்தி'' (1969) ,எஸ் . அகஸ்தியரின் ''திருமணத்திற்காக ஒரு பெண் காத்திருக்கிறாள்'' (1976), நந்தி எழுதிய ''தங்கச் சியம்மா'' (1975) என்பன குறிப்பிடத்தக்கன.

சீதனப்பிரச்சினை பற்றிய தனிமனித உணர் வுகளை நாவலில் எடுத்துக்காட்டும் நிலை யில் துரைமனோகரனின் ''பாவை'' (1966), இஸ்லாமியப் பின்னணியில் எழுதப்பட்ட என். எம். ஹனிபாவின் ''ஏமாற்றம்'' (1962), மர்மக்கடிதம் (1963), ''இலட்சியப் பெண்'' (1974) போன்றவையும் குறிப்பிடத்தக்கவை. பெண் எழுத்தாளர் வரிசையில் அன்ன லட்சுமி ராசதுரையின் ''வேப்பமரம்'', ''வழிச் சுடர்'' என்பனவும் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் தனிமனித உணர்வுகளுக்கும் முதன்மை தருகின்றன.

தோட்டத் தொழிலாளர்களின் சிக்கல்களை வெளிப்படுத்தி கோகிலம் சுப்பையாவின் 'தூரத்துப்பச்சை' (1964), பெனடிக்ற் பாலனின் ''சொந்தக்காரன்'' (1968), தெளிவத்தை ஜோசப்பின் ''காலங்கள் சாவதில்லை'' (1974),கே.ஆர்.டேவிட்டின் ''வரலாறு அவளைத் தோற்றுவிட்டது'' (1976) என்னும் நாவல்கள் வெளிவந்துள்ளன. தொ. சிங்கராஜீவின் '' தாயகம்' (1969), தோட்டத்தொழிலாளரின் குடியுரிமைச் சிக்கல் பற்றி எழுந்த நாவலாகும்.

**-கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

பாலியற் பிரச்சினையைச் சித்திரிக்கும் வகையில் எஸ்.பொன்னுத்துரையின் 'சடங்கு' (1966), யோ.பெனடிக்ற்பாலனின் 'குட்டி'(1963)' க.அருள்சுப்பிரமணியத்தின் 'நான் கெடமாட்டேன்' (1976) என்பவற்றைக் காணலாம்.


இக்காலப் பகுதியில் பல்வகையான வேறு நாவல்களும் எழுதப்பட்டுள்ளன. அவற்றை நகைச்சுவை நாவல்கள், வரலாற்று நாவல்கள்,மொழிபெயர்ப்பு நாவல்கள், குடும்ப நாவல்கள்,மர்மநாவல்கள் என நா. சுப்பிரமணியன் வகைப்படுத்தியுள்ளார். (தொடரும்)

# அமெரிக்காவுக்கு இதுவரை ஏற்பட்ட பாதிப்புகளை புதிய அதிபராகும் பராக் ஒபாமா சரி செய்வார்

## முன்னாள் அதிபர் கிளின்டன்

(வோசிங்டன்)

உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கொள்கை விவகாரங்களில் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட பாதிப்பை பராக் ஒபாமா சரி செய்வார் என, அந்நாட்டின் முன்னாள் அதிபர் பில் கிளின்டன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.



அமெரிக்காவில் வரும் நவம்பரில் அதிபர் தேர்தல் நடக்க உள்ளது. இந்தத் தேர்தலில், ஜனநாயக கட்சி சார்பில், ஒபாமா போட்டியிட உள்ளார். அவருக்கு. முன்னாள் அதிபர் பில் கிளின்டன் ஆதரவு தெரிவித்துள்ளார்.

கொலராடோ மாகாணத்தில் டென்வர் என்ற இடத்தில் நடந்த ஜனநாயக கட்சியின் மாநாட்டில் பில் கிளின்டன் பேசியதாவது, அமெரிக்கா தற்போது இரண்டு வகையில் பிரச்சினைகளைச் சந்தித்து வருகிறது. அமெரிக்கர் உள்நாட்டில் தங்களின் கனவுகளை நனவாக்க முடியாமல் அவதிப்படுகின்றனர்.

அதேபோல் உலக அளவில் அமெரிக்க தலைமை பலவீனமாக உள்ளது, தன்னிச்சையான செயல்பாடுகளாலும் நாடுகளின் ஒத்துழைப்பு இல்லாததாலும் உலகில் அமெரிக்காவின் 'நிலை பலவீனமாகியுள்ளது. அந்த பாதிப்பை ஒபாமா சரி செய்வார் என நம்புகிறேன்.

வெளிநாட்டு விவகாரங்களில் தூதரக ரீதியான அணுகு முறையையே அவர் முதலில் பின்பற்றுவார். கடைசி ஆயுதமாகத் தான் படைகளை பயன்படுத்துவார்.

மத்திய கிழக்கு நாடுகள் முதல் ஆபிரிக்கா வரையும் லத்தீன் அமெரிக்கா முதல் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய தூதரக ரீதியான அணுகு முறைகளை பின்பற்ற தற்போதைய அமெரிக்க நிர்வாகம் தவறி விட்டது.

நாட்டின் அடுத்த அதிபர் நிச்சயமாக அமெரிக்கர்களின் கனவை நனவாக்குவார். உலக அளவில் அமெரிக்க தலைமையின் பெருமையை தக்க வைப்பார். இவ்வாறு பில் கிளின்டன் கூறினார். ஓ

# உடல் ஊனமுற்றவர்களுக்கான பராலிம்பிக்ஸ் போட்டிகள்

(பீஜிங்)

பீஜிங் ஒலிம்பிக் போட்டிகள் நிறைவடைந்த சில வாரங்களில் அடுத்த திருவிழா ஆரம்பமாகவுள்ளது.

உடல் ஊனமுற்றவர்களுக்காக நடத்தப்படும் பராலிம்பிக்ஸ் போட்டிகள் வரும் செப்ரெம்பர் 6ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளன. சீனத் தலைநகர் பீஜிங்கில் 29ஆவது ஒலிம்பிக் போட்டி சிறப்பாக நடந்து முடிந்துள்ளது. பதக்கப்பட்டியலில் முதல் இடம் பிடித்து சீனா பல ஆண்டு கனவை நிறைவேற்றிக்கொண்டது.

உடல் ஊனமுற்றவர்களுக்காக 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை நடத்தப்படும் பராலிம்பிக்ஸ் போட்டிகள் பீஜிங்கில் இந்த ஆண்டு செப்ரெம்பர் 6 முதல் செப்ரெம்பர் 17 வரை நடத்தப்படவுள்ளன.

இந்தப்போட்டிகளையும் சிறப்பாக நடத்தி முடிக்க சிறிய மாற்றங்களுடன் தேசிய மைதானம் தயாராகி வருகிறது.

இதுவரை 4 இலட்சத்து 80 ஆயிரம் டிக்கெற்றுகள் விற்கப்பட்டுள்ளன. 32 ஆயிரத்துக்கும் மேற்பட்ட உடல் ஊனமுற்ற பார்வையாளர்களும் அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் டிக்கெற்றுகளை வாங்கியுள்ளனர் என பராலிம்பிக்ஸ் உதவித் தலைவர் டாஜ் ஜியாங்குவான் தெரிவித்தார்.

டிக்கெற்றுகள் விற்பனை மிகவும் குறைவாக அதாவது ரூபா 193 முதல் ரூபா 515 வரை விற்கப்படுகிறது ஒரே உலகம் ஒரே கனவு என்ற ஒலிம்பிக் கோஷம் தற்போது வானம் பூமி மற்றும் மனிதர்கள் என்று மாற்றப்பட்டுள்ளது.

இதில் 145 நாடுகளைச் சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ஓ

# அணு எரிபொருள் விநியோக சிக்கல் அணுசக்தி ஒப்பந்தத்தை பாதிக்காது

## அமெரிக்கா உறுதிபட தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அணு எரிபொருள் விநியோகிக்கும் நாடுகள் சில ஆட்சேபங்களை தெரிவித்தும், இந்திய -அமெரிக்க அணுசக்தி ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யும் திட்டம் இல்லை என, அமெரிக்கா உறுதிபட தெரிவித்துள்ளது. இந்திய - அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தத்திற்கு சர்வதேச அணுசக்தி முகவர் ஒப்புதல் வழங்கி விட்டது. அடுத்ததாக அணு எரிபொருள் விநியோகிக்கும் நாடுகள் அமைப்பு ஒப்புதல் தர வேண்டும்.

இந்த அமைப்பில், 45 நாடுகள் உறுப்பினராக உள்ளன. அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட நாடுகளுக்கு மட்டுமே, இந்த அமைப்பு அணு எரிபொருளை விநியோகம் செய்து வருகிறது. அந்த ஒப்பந்தத்தில், இந்தியா கையெழுத்திடாததால் அணு எரிபொருளை விநியோகம் செய்ய தடை உள்ளது. இந்த தடையை நீக்கி, அணு எரிபொருட்களை விநியோகம் செய்ய அனுமதிக்க வேண்டும் என, இந்தியா வலியுறுத்தி வருகிறது. அமெரிக்காவும். இதற்கு ஆதரவு தெரிவிக்கிறது.

இந்த விஷயத்தில், இந்தியாவுக்கு சலுகை காட்ட வேண்டும் என, வலியுறுத்தி வருகிறது. ஆனால் அணு எரிபொருள் விநியோக அமைப்பில் இடம் பெற்றுள்ள ஆஸ்திரியா, அயர்லாந்து, நியூசிலாந்து ஆகிய நாடுகள் இந்தியாவுக்கு சலுகை காட்ட எதிர்ப்புத் தெரிவிக்கின்றன. இதனால், சமீபத்தில் நடந்த அணு எரிபொருள் விநியோகிக்கும் நாடுகள் அமைப்பின் கூட்டம் எந்த முடிவும் எடுக்கப்படாமல் முடிவடைந்தது. அடுத்த கூட்டம் விரைவில் நடக்க உள்ளது.

இந் நிலையில், அணு எரிபொருள் விநியோக நாடுகளின் எதிர்ப்பால், இந்திய அமெரிக்க அணு சக்தி ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்யப்படலாம் என்ற பேச்சு எழுந்தது. அதை, அமெரிக்கா மறுத்துள்ளது. இது தொடர்பாக அமெரிக்க வெளியுறவு அமைச்சக தகவல் தொடர்பாளர் ரொபேர்ட்வுட் கூறியதாவது,

இந்திய - அமெரிக்கா அணு சக்தி ஒப்பந்தத்தில் மாற்றங்கள் செய்யப்படாது ஒப்பந்தத்தை எப்படியாவது நிறைவேற்ற வேண்டும் என்பதில், அமெரிக்கா உறுதியாக உள்ளது. அதற்காக கடினமாக பணியாற்றி வருகிறது.

அப்படி மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் எனில், இந்தியாவும் அமெரிக்காவும் சம்மதம் தெரிவிக்க வேண்டும். அப்படி ஒரு மாற்றம் செய்யப்படும் என நான் நினைக்க வில்லை. அணுசக்தி ஒப்பந்தம் இரு நாடுகளுக்கும் பயனுள்ளது என்பதால், அதை நிறைவேற்ற அமெரிக்கா தீவிரமாக உள் ளது.

அமெரிக்காவில் தற்போதுள்ள பாராளுமன்றின் பதவிக் காலம் முடிவடைவதால், அணு எரிபொருள் விநியோக நாடுகள் அமைப்பில் உள்ள பல நாடுகளுடன் நாங்கள் தீவிரமாக விவாதித்து, ஒப்பந்தத்தை விரைவாக நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோம்.

ஒப்பந்தம் தொடர்பாக சில நாடுகள் கேள்விகள் விடுத்துள்ளன. அவை நல்ல கேள்விகளே அவற்றுக்கும் நல்ல பதில் தருவோம். இவ்வாறு ரொபேர்ட்வுட் கூறினார். ஓ

# ஆர்ப்பாட்டக்காரர்களுடன் சமரச பேச்சுக்களை நடத்துமாறு கோரிக்கை

பாங்கொக்கில் அரசாங்க வளாகங் களை ஆக்கிரமித்திருக்கும் ஆர்ப்பாட்ட காரர்களுடன் சமரசப் பேச்சுக்களை நடத்துமாறு அந்த நாட்டுப் பிரதமர் சமக் சுந்தரவேஜ் அவர்களுக்கு அந்த நாட்டு இராணுவம் கூறியுள்ளது.

ஆயினும் அங்கு இராணுவப்புரட்சி நடக்கப்போவதாக வெளியான தகவல்களை வதந்திகள் என்று மறுத்துள்ள ஜனரல் அனுபொங் பௌசிந்தா அவர்கள் அதனால் எந்தப் பிரச்சினையையும் தீர்க்க முடியாது என்று கூறியுள்ளார்.

புதிதாக நடந்த சம்பவம் ஒன்றில் பொலிஸ் தலைமையகத்தை கைப்பற்ற முயன்ற ஆயிரக்கணக்கானவர்கள் மீது கண்ணீர் புகை பிரயோகம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

பிரதமரின் நிலைமை மேலும் ஆபத்துக்கிடமானதாக மாறி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ஓ

உலக தரிசனம்

# ரஷ்யா மீது பொருளாதாரத்தடை கொண்டு வரலாமா என ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலனை

(பரீஸ்)

ஜோர்ஜியா மீது தாக்குதல் நடத்தியதை கண்டிக்கும் வகையில் ரஷியா மீது பொருளாதாரத்தடை கொண்டுவரலாமா என்பது பற்றி ஐரோப்பிய ஒன்றியம் பரிசீலித்து வருவதாக பிரான்ஸ் வெளிநாட்டு அமைச்சர் பெர் னார்டு கவுச்சனர் தெரிவித்தார்.

ரஷ்யாவில் இருந்து பிரிந்த ஜோர்ஜியா அமெரிக்காவுடன் நெருங்கிய நட்புறவு கொண்டுள்ளது. இது ரஷ்யாவுக்கு பிடிக்கவில்லை இந்த நிலையில் ஜோர்ஜியாவில் உள்ள தெற்கு ஒசெட்டியா மாநிலம் தனி நாடு கேட்டு போராடி வருகிறது. அந்த மாநிலப்பிரிவினை வாதிகளுக்கும் ஜோர் ஜியா இராணுவ வீரர்களுக்குமிடையே மோதல் ஏற்பட்டது. இதைத்தொடர்ந்து ரஷியா இராணுவம் ஜோர்ஜியா மீது விமானத்தாக்குதல் நடத்தியது. ரஷ்யா இராணுவம் ஜோர்ஜியாவுக்குள் புகுந்து ஒஸட்டியாவை கைப்பற்றினதோடு ஒசெட்டியா அப்காசியா ஆகிய 2 மாநிலங்களையும் தனி நாடுகளாக ஏற்றுக் கொண்டு அவற்றை அங்கீகரித்தது. அதோடு ஜோர்ஜியாவில் இருந்து இராணுவத்தை முழுமையாக திரும்பப்பெற ரஷ்யா மறுத்து விட்டது.

ஜோர்ஜியா மீது ரஷியா தாக்குதல் நடத்தியதும் 2 மாநிலங்களையும் தனி நாடுகளாக அங்கீகரித்ததும் இராணுவத்தை வாபஸ் பெற மறுத்ததும் ஐரோப்பிய நாடுகளுக்கு கோபத்தை ஏற்படுத்தியுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியத்தின் அவசரகால உச்சி மாநாட்டை கடந்த திங்கட்கிழமை பிரான்ஸ் கூட்டியது .அதில் ரஷியாவுடன் உள்ள உறவு குறித்து மறு ஆய்வு செய்யப்பட்டது.

இந்த கூட்டத்தில் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை கொண்டு வருவது பற்றியும் மற்ற வழி முறைகளில் அதை தண்டிப்பது பற்றியும் பரிசீலிக்கப்பட்டது என்று ரஷ்யா வெளிநாட்டு அமைச்சர் பெர்னார்டு கவுச்னர் தெரிவித்தார்.

ஜோர்ஜியாவில் ஏற்பட்டதை நாங்கள் ஒரு போதும் ஏற்கமாட்டோம். அதனால் கடுமையான வார்த்தைகளால் அதை கண்டிக்க முயற்சி மேற்கொண்டு வருகிறோம் என்றும் அவர் கூறினார். ரஷ்யா மீது தடை விதிக்க வேண்டும் என்ற திட்டத்தை பிரான்ஸ் முன்மொழியவில்லை. ஐரோப்பிய ஒன்றியத்தின் தலைவர் என்ற முறையில் ஒரு மனதாக இந்த தீர்மானம் கொண்டு வர பிரான்ஸ் முயற்சி எடுக்கும் என்றும் கவுச்னர் கூறினார்.

இதற்கிடையில் 8தொழில் வளம் மிக்க நாடுகளில் 7நாடுகள் ஒசெட்டியா அப்காசியா நாடுகளை தனிநாடுகளாக அங்கீகரித்தது. ஜோர்ஜியாவின் இறையாண்மையை மீறிய செயல் ஆகும் என்று அறிவித்தன. அதோடு ஜோர்ஜியாவில் ரஷ்ய இராணுவம் தொடர்ந்து நீடிப்பதற்கு கண்டனம் தெரிவித்தன. ரஷ்யாவுடன் உள்ள உறவை மேற்கத்திய நாடுகள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் புதிய பனிப்போரை தொடங்க வேண்டாம் என்றும் இங்கிலாந்து வெளிநாட்டு அமைச் சர் டேவிட் மிலிபாண்டு எச்சரித்தார்.

ஜோர்ஜியா பிரச்சினைக்கு அமெரிக்காவின் தூண்டுதல் தான் காரணம் என்று ரஷ்ய பிரதமர் புடின் குற்றஞ்சாட்டிஉள்ளார் ஜனாதிபதி தேர்தலில் ஓட்டுக்களை அள்ளுவதற் காக இந்த பிரச்சினையை அமெரிக்கா தூண்டி விட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார் இந்த குற்றச் சாட்டை அமெரிக்கா மறுத்து உள்ளது. ஓ

# நான் ஜனாதிபதியானால் ஈராக் போரை முடிவுக்கு கொண்டு வருவேன் -ஒபாமா

(வாஷிங்டன்)

நான் ஆட்சிக்கு வந்தால் ஈராக்கில் நடக்கும் போரை பொறுப்பான முறையில் முடி வுக்கு கொண்டுவருவேன் என்று ஒபாமா கூறினார் டென்வர் நகரில் நடந்த ஜனநாயகக் கட்சி மாநாட்டில் ஜனாதிபதி பதவிக்கான வேட்பாளராக நியமனம் செய்யப்பட்டதை ஏற்று ஒபாமா பேசினார் இந்த பேச்சு அங் குகூடி இருந்த கட்சி பிரதிநிதிகளை கவரும் வகையிலும் அவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலும் இருந்ததாக எல்லோரும் பாராட்டினார்கள் அப்போது அவர் கூறியதாவது,

தீவிரவாதத்துக்கு எதிரான போர்தவறானது. நான் ஜனாதிபதியாக தேர்ந்து எடுக்கப்பட்டால் ஈராக் போரை பொறுப்புடன் முடிவுக்கு கொண்டு வருவேன். அதோடு ஆப்கானிஸ்தானில் அல்கொய்தா தலீபான் ஆகியோருக்கு எதிராக நடந்து வரும் போரையும் முடிவுக்கு கொண்டு வருவேன்.

குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி பதவிக்கு போட்டியிடும் ஜோன் மெக்கைன் போரை ஆதரிக்கிறார். அவர் பின்லேடனை மரணத்தின் வாச லுக்குவிரட்டி செல்வேன் என்கிறார் அவர் பின்லேடன் வசிக்கும்குகையின் வாசலுக்கு கூட போக மாட்டார் இவ்வாறு ஒபாமா கூறினார். ஓ

# மோசமான வன்முறை இடம்பெறும் நாடுகளில் இரண்டாமிடத்தில் இலங்கை

(கொழும்பு)

தெற்காசிய பிராந்திய வலய நாடுகளில் மிக மோசமான வன்முறைகள் இடம்பெறும் நாடுகளில் இலங்கை இரண்டாம் நிலையை வகிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. கடந்த எட்டு மாதங்களில் 249 குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றதாகவும் இதில் 273 பேர் உயிரிழந்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இம்மாதம் 15ஆம் திகதி வரையில் இடம்பெற்ற தாக்குதல்களில் இரண்டு அமைச்சர்களும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரும் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் எட்டு தற்கொலைக் குண்டுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகவும், தெற்காசிய பிராந்திய வலய நாடுகளில் முதன் முதலில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்ட நாடாக இலங்கை கருதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

1987ஆம் ஆண்டு ஜுலை மாதம் 5ஆம் திகதி முதன் முறையாக மேற்கொள்ளப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 40 பேர் கொல்லப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது. தெற்காசிய வலய பிராந்திய நாடுகளில் மிகவும் மோசமான வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்ற நாடாக பாகிஸ்தான் கருதப்படுகிறது. முதன் மூன்று மதாங்களில் இடம் பெற்ற குண்டுத் தாக்குதல்களில் 355பேர் கொல்லப்பட்டதுடன் அடுத்த மூன்று மாதங்களில் மேலும் 108பேர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜுலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் இடம்பெற்ற குண்டு வெடிப்புக்களில் சுமார் 156பேர் உயிரிழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இந்தியாவில் கடந்த எட்டு மாதங்களில் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் 139பேர் கொல்லப்பட்டதுடன், 272பேர் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 8 மாதங்களில் மிகவும் அமைதியான வலயமாக பங்களாதேஷ் அறிவிக் கப்பட்டுள்ளது. பிராந்தியத்தில் வன் முறைச் சம்பவங்கள் மிகவும் சொற்ப அளவில் இடம்பெற்றநாடாக பங்களா தேஷ் இனங்காணப்பட்டுள்ளது. ஓ

# மிதிவெடி அகற்றும் பணிகளுக்கு 1.6 மில்லியன் டொலர் நிதியுதவி

(கொழும்பு)

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய பகுதிகளில் மிதிவெடியகற்றும் மனிதநேய பணியை மேற்கொள்வதற்கு ஜப்பான் அரசாங்கம் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது.

சுவிஸ் மிதிவெடி நடவடிக்கை நிறுவனம், டனிஷ் மிதிவெடியகற்றும் அமைப்பு ஆகிய நிறுவனங்களின் பணிகளுக்கு இந்நிதி வழங்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பிலுள்ள ஜப்பானிய தூதரகத்தில் நடைபெற்றது. இதில் இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் கியோஷி அராக்கி, டனிஸ் மிதிவெடியகற்றும் அமைப்பின் செயற்திட்ட முகாமையாளர் ஸ்ரீன் பெட்லிஸன். சுவிஸ் மிதிவெடி நடவடிக்கை நிறுவனத்தின் செயற்திட்ட முகாமையாளர் மார்ஸ் பொனட், தேச நிர்மாண அமைச்சின் ஆலோசகர் எம்.எஸ். ஜயசிங்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய டனிஷ் மிதிவெடி அகற்றும் அமைப்பின் அதிகாரி, மிதிவெடியகற்றும் நடவடிக்கையானது இடம் பெயர்ந்த மக்களின் மீள்குடிய மர்த்தலுடன் நேரடியாக தொடர்புடையது.

எமது அமைப்பு ஜப்பான் அரசாங்கத்தின் உதவியுடன் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதிகளில் மிதிவெடியகற்றும் நடவடிக்கையை மேற்கொண்டதன் மூலம் இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர்வதற்கு உதவியுள்ளது என்றார். ஓ

# வன்னியில் சமாதான வலயமொன்றை அமைக்குமாறு ஐ.நா. விடுத்த கோரிக்கை அரசால் நிராகரிப்பு

## படையினருக்கு பாதகமாக அமையும் எனவும் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னிப் பெருநிலப்பரப்பில் சமாதான வலயமொன்று உருவாக்கப்பட வேண்டுமென ஐக்கிய நாடுகள் அமைப்பினால் விடுக்கப்பட்ட கோரிக்கையை அரசாங்கம் நிராகரித்துள்ளது.

யுத்தம் காரணமாக வன்னிப் பகுதியில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமானோர் அகதிகளாகியுள்ளதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர் மற்றும் சில தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் இணைந்து போலியான தகவல்களை ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைத்துள்ளதாக அரசாங் கம் தெரிவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பின்வாங்கி வரும் சந்தர்ப்பத்தில் இவ்வாறான சமாதான வலயங்கள் அமைத்தால் படையினருக்கு அது பாதகமாக அமையும் என இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கு அறிவித்துள்ளதுடன் குறித்த கோரிக்கையையும் நிராகரித்துள்ளது. மேலும் குடும்பத்தில் ஒரு உறுப்பினரை போராட்டத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும் என புலிகள் உத்தரவு பிறப்பித்துள்ளதாக யாழ்ப்பாண ஆயரை மேற்கோள் காட்டி அரசாங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஓ

# வடக்கு கிழக்கில் பாலங்கள் நிர்மாணிக்க அரசு நடவடிக்கை

(கொழும்பு)

நெடுஞ்சாலைகள் அமைச்சின் ஆலோசனையின் கீழ் வீதி அபிவிருத்தி அதிகார சபை மூலமாக வடக்கு கிழக்கில் 15 இரும்புப் பாலங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று அமைச்சரவை பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான அநுரபிரியதர்சன யாப்பா தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இதனை தெரிவித்தார்., அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

வடக்கு கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்காக வீதிகளை துரிதகதியில் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. அத்துடன், அவ்வீதிகளிலுள்ள பாலங்களையும் புதிதாக நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன் பிரகாரம் திருகோணமலை - பிரதேசத்தில் நான்கு பாலங்களும், சேருவில - சேமாவதி வீதியில் 6 பாலங்களும், புத்தளம் - மன்னார் வீதியில் 5 பாலங்களுமாக மொத்தமாக 15 இரும்புப் பாலங்களை நிர்மாணிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றார். ஓ

# விடுதலைப்புலிகள் இன்னும் போர்க் கோலம் பூணவில்லை

## சமர் ஆய்வுப்பொறுப்பாளர் ஜோகி

(கொழும்பு)


வன்னிப் பிரதேசம் மீதான அரச படைகளின் ஆக்கிரமிப்புத் தாக்குதல்கள் இறுகி வருகின்ற போதிலும் விடுதலைப் புலிகள் இதுவரை போர்க்கோலம் பூண வில்லை என்று புலிகளின் சமர் ஆய்வுப் பொறுப்பாளர் யோகி தெரிவித்துள்ளார்.

கடந்த வியாழக்கிழமை அவர் ஐரோப்பிய தொலைக்காட்சி ஒன்றிற்கு வழங்கிய செவ்வியொன்றில் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் வான்புலிகளின் தாக்குதலை ஒரு போதும் அரசபடைகளால் தடுத்து நிறுத்த முடியாது என்றும் கூறியுள்ளார். ஓ

---

## நல்லூரான் திருவடிக்கு இன்று பூங்காவனத் திருவிழா



### எம்மைக் காக்கப் பறந்தோடி வாராயோ

தேவர் பட்ட துயரம்
தீர்த்த எங்கள் தேவா
தேவி குஞ்சரி வள்ளி
சிந்தை நிறைந்த பாலா
சுவாமி உன்னை அழைக்கும்
குரலோசைகேட்க விலையோ
பாவி யெம்மைக் காக்கப்
பறந்தே ஓடி வா ராயோ

சிந்துபுரக் கவிராயர்

### எம் துயர் தீர்ப்பாய் நல்லூரா

ஓங்கார பொருளாம் அழகு மயிலாட
ஒய்யார் வள்ளி உடனாக
ஆங்காரம் நீக்கிட அரிய வேலாட
அசுரன் கிரவுஞ்ச மதுவழிய
பாங்காய் கூடி பக்தர் குலாமாட
பாரினிற் பரவசம் மிகையாக
ஈங்காய் வருவாய் எந்தை நல்லூரா
எம்மவர் துயரம் போக்கிடவே

புலவர் மா.கணநாதன்

### நெஞ்சில் தினமும் நினை

செல்வம் பெருகிவரத் தேசத்தோர் மேன்மையுறக்
கல்வியிலே ஓங்கிக் களிகூர –நல்லையிலே
வஞ்சியரோ டாடும் வடிவேலன் பொற்பதத்தை
நெஞ்சில் தினமும் நினை
நின்ற பழி தீர நீளும் சமரோயக்
குன்றெறிந்த நல்லைக் குமரோனே – என்றென்றும்
தஞ்சமெமக் காதலினால் தப்பா தவனடியை
நெஞ்சில் தினமும் நினை
அம்புவியில் எல்லோரும் ஆனந்த வாழ்வு பெற
வெம்பங்கள் நீங்கி விடிவெய்த –அம்பிகையாள்
கொஞ்சும் நலைவேலன் கோலத்
திருவடியை நெஞ்சில் தினமும் நினை

தனங்கிளப்பு வ. சின்னப்பா.

### வேலவனே ! காத்திடுவாய் என்றும் உவந்து

தேனும் தினைமாவும் தீனாகவே கொண்டு
மான்மகள் வள்ளி தனைச் சேர்ந்தாய் –வானோர்கள்
போற்றிடும் நல்லைப் பதியுறையும் வேலவனே !
காத்திடுவாய் என்றும் உவந்து

கவிமணி கந்த முருகேச தாசனார்.

### கயிலை செல்ல மறுத்தான் கந்தன்

மாதமொன்று கயிலையிலே காணு துன்னை
மனம் நொந்து பரிதவித்துப் போனேன் –கந்தா!
எத்தனை நாள் இன்னும் நல்லையிலே தங்கபோறாய்
இருள் சூழ்ந்து விட்ட தடா கயிலை இப்போ
முன்பொருநாள் பழனி மலை உச்சி ஏறி
முழுதுமாய் மறுத்தனை நீ கயிலை வர
இப்போது தங்கிவிட்ட 'நல்லை' விட்டு
எப்போது கயிலைக்கு வருவாய் சொல்லு
அம்மா ! நான் நல்லையிலே இருந்த வண்ணம்
மக்கள் படும் துயரமெல்லாம் அறிந்தேனன்றோ
பக்தர்களோ அலையலையாய் திரண்டு வந்து
படுதுயரம் பகர்ந்தனர் கண்ணீர் மல்க
நிச்சயமாய் நான் இங்கே தங்கி
நிகரிலா சமாதானத்தை நிறுவப் போறேன்
இட்டமுடன் கயிலை வந்து இதனைச் சொல்வேன்
இங்கிதமாய் முத்தமொன்று தருவாய் நீயும்
முத்தமிட்டு தன்கண்ணீரால் முகம் நனைத்து
சித்திரத்தேர் பவனி தனை முழுதாய்க்கண்டு
அத்துடன் அம்மையவள் அகன்றாள் நல்லை
அன்பு மகன் திருக்கலியாணம் செய்தனன்றே!

விகடகவி

# இந்தியாவின் நேரடி தலையீடு இருந்தாலே இலங்கையில் தமிழ் இனம் காக்கப்படும்

## த.தே.கூ. நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன்

(கொழும்பு)

இந்தியாவின் நேரடித் தலையீடு இருந்தாலே இலங்கையில் தமிழ் இனம் காக்கப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது என அண்மையில் சென்னை சென்றிருந்த த.தே.கூ நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் குமுதம் சஞ்சிகைக்கு அழித்த நேர் காணலின் போது தெரிவித்தார்.

நேர்காணலின் முழுவிபரமும் வருமாறு,

**கடந்த இரண்டு மாத காலமாக இலங்கையில் போர் தீவிரமடைந்துள்ளதே?**

இப்போது இலங்கையில் நடந்து வரும் இராணுவத்தின் நடவடிக்கைகளை போர் என்றே சொல்ல முடியாது அப்பாவித் தமிழ் மக்கள் வாழும் பகுதிகளில் ஆகாயத்தாக்குதல் உட்பட அனைத்து தாக்குதல்களையும் நடத்தி வருகிறது. இராணுவம். தமிழ் மக்கள் வாழும் பகுதிகளை தங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவந்து விட்டதாகக் காட்டிக்கொள்ள அவர்களை நாடோடிகளாக விரட்டியடிக்கின்றனர். உதாரணத்திற்கு அரிப்பு. சிறைத்துறை, சொக்குப்புடையான் ஆகிய பகுதிகளில் புகுந்த இராணுவம் ஒரு மணி நேரத்தில் அங்கிருந்த தமிழர்களை வீடுகளை விட்டு வெளியேறும் படி கட்டளையிட்டது. நமது மக்களும் வேறு வழியின்றி பொருட்கள் எதையும் எடுக்காமல் அப்படியே வெளியேறிவிட்டனர். அவர்களின் உடைமைகளை இராணுவம் சூறையாடி விட்டது. இது போன்ற மனித உரிமை மீறிய செயல்கள் தான் இலங்கையில் தொடர்ந்து நடந்து வருகின்றன.

**இப்போது நடந்துகொண்டிருக்கும் போரினால் இலங்கையில் பள்ளிகளும் மூடப்பட்டுள்ளனவே?**

இதற்கு முன்பு வரை போர் நடக்கும் சில நாட்களில் மட்டும் பள்ளிகள் மூடப்பட்டு திறக்கப்படும் ஆனால் இப்போது பிரச்சினை தீவிரமடைந்துள்ளதால் கடந்த இரண்டு மாதங்களுக்குமேலாகபள்ளிகள்மூடப்பட்டுகிடக்கின்றன.

**தமிழ் எம்.பி. என்ற முறையில் இந்த அவ லங்களை நீங்கள் நாடாளுமன்றத்தில் எடுத்து வைக்கிறீர்களா?**

மொத்தம் 225 உறுப்பினர்கள் கொண்ட இலங்கை நாடாளுமன்றத்தில் மொத்தம் 30 பேர் தமிழ் பேசும் எம்.பிக்கள் உள்ளனர் அதிலும் 22 பேர் தமிழ் தேசிய கூட்டணியைச் சேர்ந்தவர்கள் 'இந்த தமிழ்த்தேசிய கூட்டணிக்கு நான் நாடாளுமன்ற தலைமை கொறடாவாக இருந்து வருகிறேன். நாடாளுமன்றத்தில் நாங்கள் தமிழர்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை , கொடுமைகளைப் பற்றி பேசும் போது மற்ற உறுப்பினர்கள் எங்களை அடிக்க வருவார்கள் ஆனாலும் நாங்கள் தொடர்ந்து பேசினால் அந்தத்துறை சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் அவையில் இருக்க மாட்டார்கள் நாம் தொடர்ந்து நாடாளுமன்றத்தில் பேசினால் ஆவது இந்தப்பேச்சுக்கள் அவலங்கள் உலக நாடுகளுக்குத் தெரிந்து அவர்கள் மூலமாவது இலங்கையில் தமிழ் இனம் காப்பாற்றப்படும் என்ற நம்பிக்கை தான்.

**நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு கூட அங்கு உயிருக்கு பாதுகாப்பற்ற நிலை இருப்பதாக கூறப்படுகிறதே!**

உண்மை தான் பட்டப்பகலில் பொது இடத்தில் வைத்து ஒரு எம்.பியைச் சுட்டுள்ளது இராணுவம் . ஆனால் அதைச் செய்தது இராணுவம் என்பதாக காட்டிக்கொள்ளாமல் கொலை குறித்து விசாரிக்க இலங்கை அரசு விசாரணை கமிஷனை நியமித்துள்ளது. விசாரணை கமிஷன் என்றாலே பிரச்சினையை அரசுக்கு ஏற்றால் போல் அமுக்கி விட வேண்டும் என்று தான் அர்த்தம்.

**இந்தப்பிரச்சினைக்கு தீர்வு தான் என்ன?**

இலங்கை அரசு தமிழர்கள் பிரச்சினையில் அரசில் ரீதியான தீர்வை முன்வைத்தால் புலிகள் இது குறித்து பரிசீலினை செய்வார்கள். இல்லை எனில் இலங்கை இரண்டாவதை தவிர வேறு வழியில்லை

**இந்தியாவில் இருந்து, குறிப்பாகத் தமிழகத்தில் இருந்து நீங்கள் எந்த மாதிரி யான உதவியை எதிர்பார்க்கிறீர்கள்?**

தமிழக முக்கிய அரசியல் கட்சித் தலைவர்களும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இந் திய பாராளுமன்றத்தில் அழுத்தமாக குரல் எழுப்ப வேண்டும். இந்தியாவின் நேரடித் தலை.யீடு இருந்தாலே இலங்கையில் தமிழ் இனம் காக்கப்படும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

**கடந்த சில வாரங்களாக இராணுவ நடவடிக்கைகள் ஓங்கி இருப்பதாகவும் இது புலிகளுக்குப் பின்னடைவு என்றும் கூறப்படுகிறதே?**

சில ஆண்டுகளுக்கு முன் இலங்கை இராணுவம் மாதக்கணக்கில் போர் தொடுத்துப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பல பகுதிகளைப் பிடித்தது. ஜெயசிக்குறு என்று அந்த ஒபரேஷனுக்குப் பெயர். ஆனால் கடைசியில் புலிகள் நான்கு நாட்கள் மட்டுமே தாக்குதல் நடத்தி இராணுவத்தினரை விரட்டி அடித்து மீண்டும் அந்தப் பகுதிகளை தங்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து விட்டனர். 25 ஆண்டுகள் போராட்டத்தில் எத்தனையோ ஏற்றத்தாழ்வுகளை சந்தித்திருக்கிறோம் . அதில் இதெல்லாம் சர்வ சாதாரணம் என்றார் செல்வம் எம்.பி. ஓ

# கடலோர ரயில் பாதை அமைக்க இந்தியா ரூபா 756 கோடி உதவி

(கொழும்பு)

சுனாமியின் போது பாதிக்கப்பட்ட ரயில் தண்டவாளங் களை மறுபடியும் சீரமைத்து தருவதற்கு இந்தியா முன்வந் துள்ளது. இதற்காக இந்திய ரயில்வே துறையின் துணை நிறுவனங்களான ஐ.ஆர்.சி.ஒ. என், ஆர்.ஐ.டி.ஈ.எஸ். ஆகிய வற்றுடன் கடந்த மாதம் ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தானது.

அதன் படி இந்தியா சார்பாக ரூபா 756 கோடி (168 மில் லியன் டொலர் ) மதிப்பிலான உதவி . வழங்கப்படவுள்ளது. கடலோரப் பகுதிகளில் மணிக்கு 160 கிலோமீற்றர் வேகத்தில் ரயில் கள் செல்லும் வகையிலான தரத்தில் தண்டவாளங்கள் மற்றும் சிக்னல் களை இலங்கை ரயில் வேக்கு ஐ.ஆர்.சி.ஒ. என். நிறுவனம் செய்து கொடுக்கும் .

அதுபோன்று ஆர்.ஐ.டி.ஈ.எஸ். நிறுவனம் சார்பாக மூன்று டீசல் ரயில் எஞ்சின்கள் 16 டி.எம்.யு.மற்றும் இயந்திரங்க ளும் வழங்கல் செய்யப்படுகின்றன.

இது தவிர டீசல் எஞ்சின் களை பராமரிக்கும் லோகா பணிமனையும் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளது. ஓ

# இந்திய கடல் எல்லையில் 11 இலங்கை மீனவர்கள் கைது

இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித்த இலங்கை மீனவர்கள் 11பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவரும் விசாரணைக்காக விசாகபட்டினம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கையைச் சேர்ந்த 11 மீனவர்கள் வெள்ளிக்கிழமை ஆந்திராவையொட்டிய இந்தியக் கடல் எல்லையில் மீன்பிடித்துக் கொண்டிருந்தனர்.

அப்போது அந்தப் பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்டிருந்த இந்தியக் கடலோரக் காவல் படையினர் அந்த 11 மீனவர்களையும் கைது செய்தனர். மேலும் அவர்கள் மீன்பிடிக்க வந்த படகையும் பறிமுதல் செய்தனர்.

இதையடுத்து கைது செய்யப்பட்ட அனைவரும் விசாகபட்டினம் பொலிஸாரிடம் விசாரணைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

விசாரணைக்குப் பின் அவர்கள் அனைவரும் மாவட்ட நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப் படுவார்கள் என்று விசாகபட்டினம் துறைமுகக் காவல்நிலைய அதிகாரி தெரிவித்தார். ஓ

# குற்றமற்றவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதி

(கொழும்பு)

வெலிக்கடை மகஸின் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளின் விடுதலை தொடர்பில் தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் (ரி.எம்.வி.பி) ஜனாதிபதியின் ஆலோ சகரும் அமைச்சருமான பசில் ரஜபக்ஷவை சந்தித்துள்ளது.

இதன் போது எவ்வித குற்றமும் இழைக்காத நிலையில் , சந்தேகத்தின் பேரில் அடைத்து வைக்கப்பட்டு, வழக்குகள் எதுவும் பதிவு செய்யப்படாத நிலையில் உள்ள தமிழ் கைதிகளை விரைவில் விடுதலை செய்ய வேண்டும் என ரி.எம்.வி.பி.யின் உயர் மட்ட உறுப்பினர் இனிய பாரதி கோரிக்கை விடுத்துள்ளார்.

இச்சந்திப்பின் போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும்பாதுகாப்புபிரச்சினைகள் அசௌகரியங்கள் தொடர்பில் இனிய பாரதி பஷில் ராஜபக்ஷவின் கவனத்திற்கு கொண்டு வந்துள்ளார்.

இதற்கு பதிலளித்த பசில் ராஜபக்ஷ எம்.பி, சட்டமா அதிப ருடன் கல்ந்தாலோசித்து குற்றமற்றவர்களை விரைவில் விடுதலை செய்ய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்துள்ளார்.

மேலும் அடையாள அட்டை போன்ற ஆவணங்கள் இல்லாத நிலையில் கைது செய்யப்பட்டோர், சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டோரை விரைவாக விசாரணை செய்ய நடவடிக்கை எடுப்பதாகவும் கூறியுள்ளார். ஓ

# பயங்கரவாத அழிப்பு நடவழக்கைகளில் நாம் அரசுக்கு ஆதரவாகவே உள்ளோம்



## விமல் வீரவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய நிலைமைகளிலும் அரசாங்கம் முன்னெடுக்கும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான முக்கியமான கட்ட யுத்தத்திற்கும் நாம் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயற் படுகின்றோம் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் ஜே.வி.பி.யின் முன்னாள் பிரச்சார செயலாளருமான விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை சிங்கள நாளே டான தினமின பத்திரிகைக்கு அவர் வழங் கியிருந்த செவ்வி ஒன்றிலேயே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

மேற்படி செவ்வியில் நீங்கள் ஜாதிக ஹெல உறுமய போல் அரசாங்கத்திற்கு சார்பாக இயங்குவதாக சொல்லப்படுகின் றதே அது உண்மையா? எனக் கேட்கப்பட்ட போதே ...

ஆம் நாம் தற்போதைய நிலைமைகளில் அரசாங்கத்திற்கு ஆதரவான நிலைப் பாட்டிலேயே உள்ளோம் முக்கியமாக பயங் கர வாத அழிப்பு நடவடிக்கைகளில் நாம் அர சாங்கத்திற்கு ஆதரவாக உள்ளோம் இதன் படி நாட்டுக்கு அவசியமான அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு எமது ஆதரவு இருக்கும் ஆனால் ஜாதிகஹெல உறுமய போல் அரசாங்கத்தின் அனைத்து நடவடிக் கைகளுக்கும் நாம் ஆதரவு அளிக்கப்போவ தில்லை .

அரசாங்கத்தின் தேவையற்ற செலவீனங்கள் பிழையான நிர்வாகம் அமைச்சரவை எண்ணிக்கை என்பவற்றில் தொடர்ந்தும் நாம் அரசாங்கத்துடன் முரண் பட்டே உள்ளோம் எனவும் தெரிவித்துள்ளார். ஓ


சுழிபுரம் -வடகிழக்கு [சோழிபுரம்] அருள்மிகு சம்புநாகேஸ்வரபதி
சுயம்புநாதேஸ்வரி சமேத சுயம்பு நாதலிங்கேஸ்வரர் தேவஸ்தானம்
ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தண பஞ்சகுண்டபக்ஷ

**மஹா கும்பாபிஷேக விஞ்ஞாபனம்**

31.08.2008 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு கர்மாரம்பம்.
02.09.2008 செவ்வாய்கிழமைபி.பகல்12 மணிமுதல் 03.09.2008 புதன்கிழமை பிற்பகல் 12 மணி வரை பத்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்துதல்.
04.09.2008 வியாழக்கிழமை காலை 5.30-6.30 மணிவரை மஹா கும்பாபிஷேக குடமுழுக்கு நடைபெறும்.

சர்வபோதகாசிரியர்
'கிரியாகிரமலிஷாரசு'
சிவஸ்ரீ ச.மகாலிங்கசிவக்குருக்கள்
(பிரமத குருஅரசடிபிள்ளையார்
தேவஸ்தானம்நாயன்மார்கட்டு)

பிரதிஷ்டா குருமார் விபரம்
வழக்கம்பரை அம்மன்தேவஸ்தான பிரதமகுரு
'ஆகம கிரியாஜோதி'
சிவஸ்ரீ மு.சுப்பிரமணிய சுந்தரராஜக் குருக்கள்
தலைமையில் குருவருள் ஆசியுடன் நடைபெறும்.

பிரதிஷ்டா பிரதம குரு
'சிவாகம கிரியா கலாபூஷணம்"
'சாதக இளவரசு' 'சக்தி உபாஷகர்'
சிவஸ்ரீ மு.சு.சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள்
(வழக்கம்பரை அம்மன் தேவஸ்தானம்)

சர்வசாதகாசிரியர்
கிரியாசிரோண்மணி
சிவஸ்ரீ.சி. மகேந்திரநாதக் குருக்கள்
(பிரதம குரு மாய்க்கைப்பிள்ளையார் தேவஸ்தானம்)

இங்ஙனம் -பரிபாலனசபை.

(1450)

அநியாயமாக அடையும் பொருள் – மற்றப் பொருள்களையும் அழிக்கும்.
– பிரான்ஸ்

வலம்புரி

## சீமெந்தைப் பெற்றுக் கொள்வதில் கூடிய கவனம் தேவை

யாழ். குடாநாட்டில் அரிசிக்கு, அமெரிக்கன் மாவுக்கு, சீனிக்கு என்ற தட்டுப்பாடுகள் நீண்டு சென்று இப்போது சீமெந்துக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இத் தட்டுப்பாட்டினால் மக்கள் அலையும் நிலையைக் காண முடிகின்றது. வீடமைப்புத் திட்டங்கள் நடைமுறையிலிருப்பதனால் சீமெந்துக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

யாழ். அரச அதிபரினால் எடுத்து வரப்பட்ட சீமெந்து குடாநாட்டின் தேவைவல்ய நிறைவு செய்யப் போதுமானதல்ல.

அரச திணைக்களங்கள், கூட்டுறவுச் சங்கங்கள் எனப் பல அமைப்புகளும் கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருப்பதால் சீமெந்தைக் குடாநாட்டுக்குக் கொண்டு வருவதில் தனியார் துறையினரும் கவனம் எடுத்தாக வேண்டும்.

எனினும் கப்பல் கூலி, பொருள்கள் காணாமல் போகும் நட்டம், ஏற்றி இறக்கும் போது ஏற்படும் சேதாரம் என்ற வகையில் சீமெந்தைக் கொண்டு வந்து அரச அதிபரினால் நிர்ணயம் செய்யப்பட்ட விலைக்கு வழங்க முடியாதுள்ளதாகத் தனியார் வியாபாரிகள் முணுமுணுப்பதும் தெரியாமலல்ல.

தனியார் வியாபாரிகளின் நியாயமான கவலைகளைப் போக்குவதற்காக கட்டுப்பாட்டு விலையை யாழ். அரச அதிபர் சற்று அதிகரித்திருந்தார்.

எனவே சீமெந்தை யாழ். குடாநாட்டுக்கு எடுத்து வருவதில் தனியார் வியாபாரிகள் கவனம் எடுக்க வேண்டும். இதற்கு மேலாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் அரச சார்புடைய வர்த்தக அமைப்பொன்று யாழ்ப்பாண மக்களின் எந்தத் தேவையையும் பூர்த்தி செய்யாமல் சொந்த வியாபாரம் நடத்தி வருகின்றது. இது பற்றி எவருமே அக்கறை கொள்வதாகவில்லை.

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைத் தாள் தட்டுப்பாடு ஏற்பட்ட காலத்தில் இந்த அமைப்பு கப்பல் மூலம் எடுத்து வந்த பத்திரிகைத் தாள் அத்தனையும் தனியார் வியாபாரிகளுக்குக் கொடுக்கப்பட்ட விபரம் ஊரறிந்தது.

என்ன செய்வது? நாடு குழம்பிய நிலையில் –அப்பாவி மக்களின் வயிறு பற்றி எரியும் போது ஆசாபூதிகள் தங்கள் சுயத்தைக் காட்டுவது நியதி என்ற அடிப்படையில் எல்லாம் நடந்து போகின்றது.

இத்தகைய மோசடிகள் நின்று போவதற்கு தட்டுப்பாட்டுக் கலாசாரத்தை முறியடிப்பதே ஒரு வழி. இதற்குத் தனியார் வியாபாரிகளின் ஒத்துழைப்புக் கட்டாயமானதாகும்.

# ஊடகவியலாளர் தாக்கப்பட்ட வழக்கு நவம்பர் 14க்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

சிரச தொலைக்காட்சி ஊடகவியலாளர் தாக்கப்பட்டு கமராக்கள் அபகரிக்கப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணைகளுக்கு பிரதிவாதிகள் மன்றில் ஆஜராகி இருந்த போதிலும் பேலியகொடை பொலிஸார் அங்கு சமூகமளித் திருக்கவில்லை.

இதனால் வழக்கு விசாரணைகளை நவம்பர் மாதம் 14ஆம் திகதிக்கு ஒத்திவைப்பதாக கொழும்பு நீதிவான் நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

ஆகஸ்ட் 4ஆம் திகதி நடைபெற்ற களனி மேம்பால அங்குரார்ப்பண நிகழ்வுகளின் போது செய்தி சேகரிக்கச்சென்ற சிரச ஊடகவியலாளர் மீது தொழில் அமைச்சர் மேர்வின் சில்வா உள்ளிட்ட அவரது ஆதரவாளர்கள் தாக்குதல் நடத்தியதுடன் அவர்களது கமராக்களையும் அபகரித்துச் சென்றதாக பேலியகொடை பொலிஸ் நிலையத்திற்கு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்ட சந்தேக நபர்கள் மன்றில் ஆஜராகி பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

இந்த நிலையில் வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. வழக்கினைத்தொடர்ந்த பொலிஸ்தரப்பினர் மன்றில் ஆஜராகியிருக்கவில்லை. இதனால் விசாரணைகள் ஒத்திவைக்கப்பட்டன.

இதன்படி மனுதாரர்களான பேலியகொடை பொலிஸார் சந்தேக நபர்கள் தொடர்பில் முழுமையான விசாரணைகளை நடத்தி நவம்பர் மாதம் 14ஆம் திகதி மன்றில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய வேண்டும் என கொழும்பு மேலதிக நீதிவான் மஞ்சுள திலக ரத்ன உத்தரவிட்டார். (ஓ)

# மருத்துவ பீட மாணவர் விடுதிகள் அமைந்துள்ள பிரதேசம் அதி உயர்பாதுகாப்பு வலயமா?

## புகைப்பட ஊடகவியலாளர் சங்கம் கேள்வி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்களிடம் கருத்துக்களை கேட்டறிந்து தகவல்களை திரட்டுவதற்காக சென்ற ஊடகவியலாளர் மீது பல்கலைக்கழக வைத்திய பீட மாணவர்கள் பொலிஸாரின் முன்னிலையிலேயே தாக்குதல்களை மேற்கொண்டனர் என்று குற்றஞ்சாட்டிய புகைப்பட ஊடகவியலாளர் சங்கம் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீட மாணவர்களின் விடுதிகள் அமைந்துள்ள பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமா? என்றும் கேள்வியெழுப்பியது.

கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் சிலரினால் ஊடகவியலாளர்கள் நால்வர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் தொடர்பில் இலங்கை இதழியல் கல்லூரி கேட்போர் கூடத்தில் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டின் போதே புகைப்பட ஊடகவியலாளர் சங்கத்தின் உறுப்பினர்கள் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினர்.

புகைப்பட ஊடகவியலாளர் சங்கத்தின் தலைவர் ஸ்ரீலால் கோமஸ் தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் சங்க உறுப்பினர்கள் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது,

கொழும்பு பல்கலைக்கழகத்தின் பதிவாளரின் கூற்றின் பிரகாரம் கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர் விடுதி அமைந்துள்ள பிரதேசம் அதியுயர் பாதுகாப்பு வலயமா? அப்படியாயின் நூற்றுக்கணக்கானோர் ஒன்று திரண்டு ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்துவதற்கு அனுமதி வழங்கியது யார்? புகைப் படக் கருவிகளை பொலிஸாரிடம் ஒப்படைத்தது யார்? என்பதற்கு பொலிஸார் உடனடியாக பதிலளிக்கவேண்டும் என்பதுடன் குற்றவாளிகளை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

எதிர்காலத்தில் வைத்தியர் சபையில் காலடி எடுத்து வைக்க வேண்டிய வைத்திய பீட மாணவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் கண்டிக்க வேண்டிய செயலாகும். பொலிஸார் முன்னிலையிலேயே தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்றால் பொலிஸார் தங்களது தொழிலை மருத்துவ பீட மாணவர்களிடம் ஒப்படைத்து விட்டார்களா? புகைப்பட ஊடகவிய லாளர்களுக்கு புகைப்படங்களை பிடிப்பதற்கு உரிமையுண்டு என்று ஊடகத்துறை அமைச்சர் தெரிவித்திருக்கின்ற நிலையில் அந்த உரிமையினை எவராலும் தடுத்து நிறுத்தமுடியாது.

ஊடகவியலாளர்கள் மீது அரசியல்வாதிகள், வீதியில் செல்வோர் தாக்குதல்களை மேற்கொண்டுவருகின்றனர். ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்ட ஆரம்ப சம்பவத்தின் போதே ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தால் இவ்வாறானதொரு நிலை ஏற்பட்டிருக்காது என்பதுடன் ஊடகவியலாளர்கள் தங்களது கடமைகளை சுதந்திரமாக செய்வதற்கான சூழலை அரசாங்கம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டும்.

மருத்துவபீடத்தை சேர்ந்த மாணவி விபத்தில் சிக்கிய போது ஊடகவியலாளர்கள் இணைந்து உதவிசெய் துள்ளனர். எனினும் தகவல்களை திரட்டுவதற்காக சென்ற ஊடகவியலாளர்கள் மருத்துவ பீட மாணவர்களினாலேயே தாக்கப்பட்டுள்ளனர். யாராக இருந்தாலும் அவரது தொழிலுக்கு மதிப்பளிக்க வேண்டும்.

புகைப்பட ஊடகவியலாளர்களினால் படம்பிடிப்பதற்கு முடியாவிடின் பொலிஸ் நிலையத்தில் பல்கலைக்கழக மாணவர்களினால் எப்படி ஊடகவியலாளர்களை படம் பிடிக்க முடியும். இவ்வாறானதொரு நிலையில் யாராக இருந்தாலும் பொலிஸார் சிவில் சட்டத்தை அமுல்படுத்த வேண்டும் என்பதுடன் புகைப்பட கருவிகளைத் திருடியோரை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தனர்.

# சிலுவையின் நிழலில்



அன்று இயேசு சிலுவையில் தானே அவமானமாய், கள்வர்கள் மத்தியில், துன்பங்களின் தோல்வியில் அடையாளமாய் கொல்லப்பட்டார். எனவேதான் நாம் சிலுவைகளே வேண்டாம் என்று நினைக்கின்றோம்.

இன்று நம்மில் யாரும் சிலுவையை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதில்லை. துன்பம் என்னும் சிலுவையை நாம் சந்திக்கத் தயாராக இருப்பதில்லை நாம் அனைவரும் இன்னொரு பேதுருவாக வாழ்ந்து கொண்டிருக்கிறோம் இன்றைய நற்செய்தியில் இதைத் தானே பார்க்கின்றோம். இயேசு தாம் பாடுகள் பலபட வேண்டும். சிலுவையில் அறையப்படவேண்டும் என்று சொன்னபோது பேதுரு அதை ஏற்றுக் கொள்ள முடியாமல் இயேசுவைக் கடிந்து கொள்கிறார் இது நற்செய்தி யின் முதல் பகுதி.

## பரமபிதா காட்டிய பாதை

மனித எண்ணத்தில் சிலுவை என்பது அவமானத்தின் சின்னம். இயேசு அதை மகிமையின் சின்னமாய் மாற்றினார். நமக்கு சிலுவை ஒரு தோல்வியின் அடை யாளம் ஆனால் இயேசு அதை தன் உயிர்ப் பின் மூலம் வெற்றியின் அடையாளமாக்கினார். பவுலடி யார் சொல்வது இங்கு சாலப் பொருந்தும்' சாவு வீழ்ந்தது வெற்றி கிடைத்தது 'சாவே உன் வெற்றி எங்கே? சாவே உன் கொடுக்கு எங்கே?

புயலுக்குப் பின்தான் அமைதி இருளுக்குப் பின் தான் ஒளிஅதைப் போல சிலுவைக்குப் பின்தான் வெற்றி மகிமை மகிழ்ச்சி சிலுவை இல்லை என்றால் உயிர்ப்பு இல்லை. சிலுவை இல்லை என்றால் இயேசு இல்லை. சிலுவை இல்லை என்றால் வாழ்வு இல்லை சிலுவை இல்லையென்றால் சீடன் இல்லை சீடர் தான் தலைவனின் வழி செல்ல வேண்டும். இயேசு தலைவராக இருந்து சிலுவையில் தொங்கினார் என்றால் சீடனும் தலைவன் வழி சென்று இயேசுவைப் போல் சிலு வையைச் சுமக்க வேண்டும் இது தான் நற்செய்தியின் இரண் டாவது பகுதி.

நாம் துன்பம் என்னும் நிழலை தவிர்க்க வேண்டும் பார்க்கக்கூடாது என்று நினைத்தால் யேசுவின் சிலுவை மர நிழ லில் வாழ்வோம். அப்போது துன்பங்கள் இன்பமாகும். தோல்வி வெற்றியாகும். அவமானம் மகிமையாக மாறும் சிலுவையின் நிழலில் நாம் அடைக்கலம் ஆவோம். அது நமக்கு இனிமையைத்தரும் எனவே யேசுவின் சிலுவை யோடு நம் சிலுவையையும் சுமந்து செல்வோம் அதுவே வாழ் வுக்கான பாதை வெற்றிக்கான வழி.

ஜோன் ரொபேர்ட்

# திருகோணமலை கடற்படைத்தளம் மீதான வான் புலிகளின் தாக்குதல் எழுப்பும் கேள்விகள்?

கடற்படையின் கிழக்குப் பிராந்திய கடற்படைத் தலைமையகம் மீது வான்புலிகள் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு நடத்தியுள்ள தாக்குதலானது களநிலைமை குறித்த மறு மதிப்பீடு ஒன்றிற்குச் செல்ல வேண்டியதான தொரு நிர்ப்பந்தத்தை படைத்தரப்பிற்கு மட்டுமல்ல வேறு உள்நாட்டு, வெளிநாட்டு சக்திகளுக்கும் நிச்சயம் ஏற்படுத்தியிருக்கும் என்றே உறுதியாக நம்பலாம்.

கடற்படையின் கிழக்குத் தலைமையகம் மீது வான்புலிகள் நடத்திய தாக்குதலில் கடற்படைக்கு ஏற்பட்டுள்ள உயிர் இழப்புக்கள் மற்றும் உடமை இழப்புக்கள் என்பனவற்றின் அளவு, தொகை என்பன இங்கு முக்கியமான தொரு விடயம் அல்ல.

படைத்தரப்பின் அதி முக்கியத்துவம் வாய்ந்த கேந்திர நிலையம் ஒன்றின் மீது இலக்குத் தவறாது வான்புலிகள் தாக்குதல் நடத்தியுள்ளமையும், விடுதலைப் புலிகளின் வான் கலங்கள் தாக்குதலை நடத்திவிட்டு வெற்றிகரமாகத் தளம் திரும்பியுள்ளமையுமே இங்கு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

அரசும், படைத்தரப்பும் அண்மைக்காலமாக மேற்கொண்டு வரும் பிரச்சாரத்தின் பிரகாரம், விடுதலைப்புலிகள் இயக்கமானது தனது வான்படைகளை விடுதலைப்புலிகள் இன்னும் செயல்திறன் மிக்கதாக வைத்துக் கொண்டுள்ளனர் என்பதை அது ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

ஏனெனில், விடுதலைப்புலிகள் இன்னமும் தனது வான்படை மூலம் தாக்குதலை மேற்கொள்ளும் சக்தி கொண்டவர்களாக வுள்ளனர் என்பதை நிரூபணம் செய்துள்ளனர். இதன் காரணமாக விடுதலைப் புலிகளின் இராணுவ ரீதியிலான செயல்திறன் முடக்கப்பட்டுவிட்டது என்ற பிரச்சாரம் இனி ஏற்றுக்கொள்ளப்படத்தக்கதொன்றாக இருக்கப் போவதில்லை.


அத்தோடு, விடுதலைப்புலிகள் தமது வான் படையை வன்னிப் பிரதேசத்தில் வைத்துப் பராமரிக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளனர் என்பது பராமரிப்புக் குறித்த விடயத்தைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் இல்லாமல் இல்லை.

மேலாக ராடர் தொகுதியுடன் இணைக்கப்பட்ட தானியங்கிப் பீரங்கிகளும்கொள்வனவு செய்யப்பட்டன. ஆனால் இரண்டாவது முறையும் தலைநகர் கொழும்பு வூான்புலிகளின் தாக்குதலுக்குள்ளான போது இப் பாதுகாப்பு ஏற்பாடுகளினால் வான் புலிகளுக்கு இடையூறு ஏற்பட வில்லை. இலக் கை தாக்கிவிட்டு அவர்கள் தளம் திரும்பியிருந்த னர்.



ஆனால் படை த்தரப்பில் பயன்

கடற்படைக்கு உயிரிழப்புக்கள் மற்றும் உடமை இழப்புக்களின் மதிப்பீட்டை விடவும் படைத்தரப்பின் அதிமுக்கியத்துவம வாய்ந்த கேந்திர நிலையம் ஒன்றின் மீது இலக்குத் தவறாது வான்புலிகள் தாக்குதல் நடத்திவிட்டு வெற்றிகரமாக தளம் திரும்பியுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.



அதாவது, ஏனைய படையணிகள் போன்றில்லாது வான் படையை பராமரிப்பதுஎன்பதுகடினமான தொரு விடயமாகும். அதாவது, விமான ஓடுபாதையில் இருந்து விமானங்கள்வரைபாதுகாப்புடன் பராமரிக்கவேண்டியவையாகவுள்ளன.

இத்தகைய நிலையில் வான் புலிகள் இலங்கையின்கேந்திரநிலை ஒன்றின் மீது தாக்குதலை நடத்திவிட்டு வெற்றிகரமாகத் தளம் திரும்பியுள்ளமையானது வான்புலிகள் முழு மூச்சில் செயற்படும் ஆற்றலைக் கொாண் டுள்ளனர் என்பதை வெளிப்படுத்தும் ஒன்றா கவே கொள்ளத்தக்கதாகும்.

அதிலும் குறிப்பாக வான்புலிகள், கடற்படையின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பகுதி மீது தாக்குதல் நடத்தியமையானது வான்புலிகள் தமது இருப்பை வெளிப்படுத்துவதற்கான நடவடிக்கையாக மட்டும் கொள்ளத்தக்கதொன்றல்ல. அரச படையின் பாதுகாப்பிற்கு அவர்கள் விடுத்துள்ள சவாலாகவே கொள்ளத்தக்கதாகும்.

வான்புலிகள் 2007 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கட்டுநாயக்கா வான்படைத் தளத்தின் மீது தாக்குதலை நடத்தியபோது இத் தாக்குதலானது எதிர்பாராத வேளையில் வான் புலிகளால் நடத்தப்பட்ட தாக்குதல் என படைத் தரப்பினாலும், அரச தரப்பினாலும் கூறப்பட்டது.


அத்தோடு படைத்தரப்பு வான் எதிர்ப்பு நடவடிக்கைக்கு தயாராக இருக்கவில்லை என்றும் கூறப்பட்டது. இதனை அடுத்து வான் பாதுகாப்பு செய்ற்பாடுகள் தீவிரமாக்கப் பட்டன. நவீன ராடர் கருவிகள் தென்னிலங்கை உட்பட கேந்திர நிலையங்களில் பொருத்தப்பட்டன. இவற்றில் சிலவற்றைச் சில நாடுகள் அன்பளிப்பாகவும் வழங்கின. அத்தோடு வான் பாதுகாப்பிற்கென நவீன பீரங்கிகளும், ஏவுகணைகள் பொருத்தப்பட்ட விமானங்களும், உலங்குவானூர்திகளும் கொள்வனவு செய்யப்பட்டதோடு, அவை எவ் வேளையிலும் தயார் நிலையிலும் வைக்கப் பட்டன. வெளிநாட்டுப் பயிற்சியாளர்களும் வரவழைக்கப்பட்டிருந்தனர். இவற்றிற்கும்

படுத்தப்பட்டிருந்த ஆயுத தளபாடங் கள் மீது குறை கூறப்பட்டன. குறி ப்பாக இந்தியா அன்பளிப்பாக வழங்கிய "இந்திய ராடர்கள்" திறம்பட செய லாற்றவில்லை எனக் குறை கூறப்பட்டது. அதன் பின்னர் தாக்குதல் வேளையில் ராடர் இயங்கிக் கொண்டிருக்கவில்லை எனக் கூறப்பட்டது.

இதன் பின்னர் வான் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் தீவிரமாகின. நவீன விமானங்கள் விமானப்படையில் இணைக்கவும் பட்டன. இந்த வகையில் விமானப் படையும், வான் பாதுகாப்பு ஏற்பாடுகளும் பலப்படுத்தப்பட்ட நிலையில், விடுதலைப் புலிகளின் வான் படையைச் செயலிழக்கச் செய்யும் வகையில் தொடர்ச்சியான விமான தாக்குதல்களை வான் புலிகளின் நிலைகள் மற்றும் விமான ஓடுபாதை என்பவற்றின் மீது மேற் கொண்டன.

விமானப்படை, விடுதலைப் புலிகளின் வான்படையின் ஓடுபாதை மீதான தாக்குதல் எனக் கூறி நடத்திய தாக்குதலை மதிப்பிட்டால் அப் பகுதியானது பெரும் குன்றும், குழியும் நிறைந்த பகுதி யாக இன்று இருத் தல் வேண்டும்.

இத்தகைய நிலையில் அரச தரப்பும் சரி, விமானப் படையும் சரி விடுதலைப் புலிகளின் வான்கலம் எதுவும் இனிமேல் வானில் பறக்க முடியாது எனவும் பறக்க முற்படும் அடுத்த கணமே அவை சுட்டுவீழ்த்தப்படும் எனச் சவால் விடுத்தும் இருந்தன பல மாதங்கள் வான் புலிகள் தாக்குதல் நடத்தாது இருந் தமை அரசதரப் பிற்கு வாய்ப்பாக வும் இருந்தது.




இத்தகைய தொரு நிலையில் தான் வான் புலி கள் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திருமலைத் துறைமுகப் பகுதியில் வெற்றிகரமான தாக்குதல் ஒன்றை நடத்திவிட்டுத் தளம் திரும்பியுள்ளனர்.

இத்தாக்குதல் குறித்து அரசும், படைத் தலைமையும் எதனைக் கூறிக்கொண்டாலும், இத் தாக்குதலை அவர்கள் புறம் தள்ளிவிட முடியாது. இதனை ஏ.எப்.பி. செய்திச் சேவையின் மதிப்பீடு வெளிப்படுத்தியது.

"கடந்த 16 மாதகால இடைவெளியில் படையினர் மீது வான்புலிகள் நடத்திய முதன்மைத் தாக்குதல் திருமலைத் துறை முகத்தின மீது நடத்தப்பட்டுள்ளது" என ஏ.எப்.பி. செய்திச் சேவை தனது மதிப்பீட்டினை வெளிப்படுத்தியிருந்தது.

அடிப்படையில், வான்புலிகளின் இத் தாக்குதலானது, வான் பாதுகாப்புச் செயற்பாடுகள் குறித்து மறு பரிசீலனை செய்ய வேண்டியதான கட்டாயம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது.

அதாவது, வான் புலிகளின் பறப்பை விமானப் படையாலோ, வான் பாதுகாப்பு செயற்பாடுகளினாலோ கட்டுப்படுத்த முடியாது என்பது ஊர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது.

அத்தோடு, விடுதலைப் புலிகளின் வான் படையைச் செயலிழக்கச் செய்வதற்காக இதுவரை அரசு மேற்கொண்ட வான் தாக்குதல்கள் எவையும் வர்ன்புலிகளை முடக்கி விடுபவையாகவோ அவர்களின் செயற்பாட்டை ஒழித்து விட்டனவையாகவோ அமையவில்லை என்பதாகும்.

***இதேவேளை வான்புலிகள் தாக்குதலுக்கு நீண்டகால இடைவெளியை எடுத்துக் கொண்டமையானது வான்புலிகளின் செயல் திறன் பாதிக்கப்பட்டதினால் அல்ல, தேவைக் கான காத்திருத்தல் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.***

ஆனால், இது தனியாக வான்புலிகளுக்கு மட்டும் தான் பொருத்தப்பாடானதொன்றல்ல. விடுதலைப் புலிகளைப் பொறுத்து அதாவது, அதன் பல்வேறு வகை படைக் கட்டுமானங்களைப் பொறுத்தும் பொருத்தப்பாடானதொன்றாகவே கொள்ளத்தக்கதாகும்.

எடுத்துக்காட்டாகக் கடற்புலிகளின் நடவடிக்கைகள் இன்று மட்டுப்படுத்தப்பட்டுள்ள வேளையில் அது இலங்கை கடற்படையின் மேலாண்மையால் கட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகக் கொள்ளப்படுதல் சரியானதொரு மதிப்பீடாக இருக்கமாட்டாது.

ஏனெனில், கடற்புலிகளின் செயற்பாட்டைச் செயலிழக்கச் செய்யும் வகையில் இலங்கை கடற்படை சாதனைகள் எதையும் செய்துவிடவில்லை.

மாறாகக் கடற்புலிகளின் சில தாக்குதல் குறித்து இன்னமும் குழப்பமடைந்த நிலையிலேயே இலங்கை கடற்படை உள்ளது. ஆகையினால், படைத்தரப்பின் பிரச்சாரத்தின் அடிப்படையிலோ அன்றி களமுனையில் வெளிப்படையாகத் தெரியும் சில விடயங்களின் அடிப்படைகளிலோ யுத்தம் குறித்து தீர்மானம் எடுப்பவர்கள் தவறாக மதிப்பீடு ஒன்றிற்குச் செல்பவர்களாகவே இருப்பர்.

மிக விரைவில் இவ்வாண்டின் இறுதிக்குள் தோற்கடிக்கப்பட்டு விடும் என்பதே.

அதிலும் குறிப்பாக இராணுவம் கிளிநொச்சி நகரை நெருங்கிவிட்டது. இன்னமும் ஓர் கடுமையான மோதலின் பின்னர் கிளிநொச்சி நகர் கைப்பற்றப்படுவதோடு, விடுதலைப்புலிகளும் தோற்கடிக்கப்பட்டு விடுவார்கள் என்பது முக்கியமானதாகும்.

ஆனால், சிங்கள ஊடகங்களோ அதற்கும் சற்று மேலானதாக மல்லாவி, துணுக்காய், நாச்சிக்குடா ஆகிய மூன்று இடங்களும் கைப்பற்றப்படுமானால் விடுதலைப் புலிகளை வெற்றி கொண்டதாகி விடும் எனக் கூறுகின்றன.

ஏனெனில், அங்குதான் -விடுதலைப் புலிகளின் மூன்று முக்கிய தளங்கள் இருப்பதாகவும், அங்கேயே தேசியத் தலைவர் வே. பிரபாகரன் தங்கியிருப்பதாகவும் அவை பிரச்சாரம் செய்கின்றன. ஆகையினால், இத்தளங்கள் கைப்பற்றப்பட்டால் புலிகள் ஒழிக்கப்பட்டு விடுவார்கள் என அவை கூறுகின்றன.

இத்தகையதொரு நிலையில் வான்புலிகள் கடற்படையின் கிழக்குத் தலைமையகம் மீது தாக்குதலை நடத்தி விட்டுத் திரும்பி வந்தமை இரு பிரதான கேள்விகளை எழுப்புபவையாகவுள்ளன.

01. படைத்தரப்பு கூறிக்கொள்வது போன்று விடுதலைப்புலிககள் தாக்குதலை நடத்தும் சக்தியை இழந்துவிட்டார்களா?

02. பாதுகாப்பு ஏற்பாடுகளினால் வான் புலிகளைத் தடுத்து நிறுத்திவிட முடியுமா? என்பவையேயாகும்.

வான்புலிகள் தற்பொழுது நடத்திய தாக்குதலில் தமக்குப் பாரிய சேதங்கள் ஏற்படவில்லை என்றும், இதுபோன்ற தாக்குதல்கள் தமது இராணுவ நடவடிக்கைகளைப் பாதிக்கமாட்டாது என அரச தரப்பும், படைத் தலைமையும் விளக்கம் அளிக்கவும், பிரச்சாரம் செய்ய முற்படலாம்.

ஆனால், இத் தாக்குதல்களை அடுத்து எழுப்பப்படும் கேள்விகள் சிலவற்றை படைத் தரப்பு புறந்தள்ளி விடுதல் என்பன இலகுவான விடயம் அல்ல. இதில் முதலாவதாக

வான்புலிகள் தாக்குதலுக்கு நீண்டகால இடைவெளியை எடுத்துக்கொண்டமையானது அவர்களின் செயல்திறன் பாதிக்கப்பட்டதினால் அல்ல, தேவைக்கான காத்திருத்தல் என்பது வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

— அமிர்தன்

# முதலாவது ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலிய அணி வெற்றி

## 74 ஓட்டங்களுடன் சுருண்டது பங்களாதேஷ்



(டார்வின்)

மைக்கெல் ஹஸி, மார்ஷ் சிறப்பான ஆட்டத்தின் மூலம் அவுஸ்திரேலிய அணி முதலாவது ஒரு நாள் போட்டியில் 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பங்களாதேஷ் அணியை வீழ்த்தியது.

பங்களாதேஷுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 3 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் நேற்று டார்வினில் நடைபெற்ற முதலாவது ஒரு நாள் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது.

இதன் அடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி மார்ஷ், மைக்கெல் ஹஸியின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களையிழந்து 254 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கெல் ஹஸி 85 ஓட்டங்களையும் மார்ஷ் 76 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ஷாகாடட் ஹுசைன் 3 விக்கெட்டுக்களையும் ஷகிப் ஹசன் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 255 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி முன்னணித் துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நிலையில் 27.4 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 74 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 180 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் தமீம் இக்பால் 21 ஓட்டங்களையும் சலீப் ஹசன் 14, அலோக் ஹபாலி 12 ஓட்டங்களையும் எடுத்தனர். ஏனையோர் இரட்டை எண் இலக்கைக் கூட எடுக்காமல் ஆட்டமிழந்தனர்.

பந்து வீச்சில் வைற் 1.4 ஓவர்கள் பந்து வீசி 5 ஓட்டங்களை மாத்திரம் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் ஜோன்ஸன், அறிமுக வீரர் ஜீவ்ஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

ஆட்ட நாயகனாக அவுஸ்திரேலிய அணியின் மைக்கெல் ஹஸி தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் அவுஸ்திரேலிய அணி 1:0 என்றகணக்கில்முன்னிலையிலுள்ளது. (05)

## அன்ரூ சைமன்ட்ஸ் கிரிக்கெட்டின் உஷைன் போல்ட்

### ஆஸியின் மைக்யங் கூறுகிறார்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் அன்ரூ சைமன்ட்ஸ் தடகளச் சம்பியன் உஷைன் போல்ட்டுக்கு நிகரானவர் என அவுஸ்திரேலிய அணி களத் தடுப்புப் பயிற்சியாளர் தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் நடந்து முடிந்த பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் ஜமெக்கா வீரர் உஷைன் போல்ட் 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் உலக சாதனை படைத்துத் தங்கம் வென்றார். அவர் மேலும் 2 தங்கப் பதக்கங்களை வென்றார்.

இந் நிலையில் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் களத் தடுப்பு சிறப்பு பயிற்சியாளரான மைக்யங், அந் நாட்டு வீரர் அன்ரூ சைமன்ட்ஸ், போல்ட்டுக்கு நிகரானவர் என்று கூறியுள்ளார்.

ஒரு தடகள வீரருக்கு உரித்தான அனைத்துத் தகுதிகளும் சைமன்ட்ஸுக்கு இருப்பதாகவும் அவர் எந்த விளையாட்டில் ஈடுபட்டிருந்தாலும் உச்சிக்கு வந்திருப்பார் என்றும் யங் கூறியுள்ளார்.

ஜென்டி ரோட்ஸ், ரிக்கி பொன்டிங் மற்றும் மைக்கல் கிளார்க் ஆகியோர் மிகச் சிறந்த களத் தடுப்பாளராக இருந்தபோதிலும் அவர்களை எல்லாம் விட சிறந்த தடகள தன்மையை சைமன்ட்ஸ் பெற்றிருப்பதாக யங் கூறியுள்ளார்.

பிராட்மேனை சிறந்த ஆட்டக்காரர் என்று சொல்வதுபோன்று பொன்டிங்கை சிறந்த ஆட்டக்காரர் என்று சொல்வதுபோல சைமன்ட் ஸை சிறந்த வீரர் என்று சொல்லலாம் என யங் தெரிவித்துள்ளார். (05)

## தோனிக்கு கேல்ரத்னா விருது

(புதுடில்லி)

இந்திய ஒரு நாள் போட்டி அணியின் தலைவர் தோனிக்கு ராஜீவ் காந்தி கேல்ரத்னா விருது வழங்கப்பட்டது. தோனியின் சார்பில் அவரது தந்தை, ஜனாதிபதி பிரதீபா பாட்டீலிடமிருந்து இந்த விருதைப் பெற்றுக் கொண்டார்.

இந்திய விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும் உயர்ந்த பட்ச விருதான ராஜீவ் காந்தி கேல்ரத்னா விருதை பெற இந்திய ஒரு நாள் போட்டி அணியின் தலைவர் மகேந்திர சிங் தோனி தேர்ந்தெடுக்கப்பட்டார். (05)

## ஒலிம்பிக்கில் கிரிக்கெட்; அவுஸ்திரேலியா தீவிரம்

(மெல்பேர்ன்)

ஒலிம்பிக்கில் கிரிக்கெட் விளையாட்டைச் சேர்ப்பதில் அவுஸ்திரேலியா முயற்சி எடுத்து வருகின்றது.

நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒலிம்பிக் போட்டிகள் நடத்தப்படுகின்றன. இதில் கிரிக்கெட்டைச் சேர்க்க வேண்டும் என முழு முனைப்புக் காட்டி வருகின்றது அவுஸ்திரேலியா.

சர்வதேச வீரர்கள் பொன்டிங், கில்கிறிஸ்ட், ஸ்டீவ்வோ, சிமித், கங்குலி, சங்கக்கார, லக்ஷ்மன் உட்பட பலர் இதற்காக ஆதரவுக் குரல் எழுப்பியுள்ளனர்.

சர்வதேச ஒலிம்பிக் குழு (ஐ.ஓ.சி) 2013 ஆம் ஆண்டு இது பற்றி இறுதி முடிபை எட்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சி.ஏ. பிரதிநிதி பீற்றர்யங் கூறுகையில்,

கிரிக்கெட் ஒலிம்பிக்கில் சேர்க்கப்படும் பட்சத்தில் துணைக் கண்டங்களில் ரி.வி. ரசிகர்களின் எண்ணிக்கை கணிசமாக உயரும். இது கிட்டதட்ட உலக மக்கள் தொகையில் நான்கில் ஒரு பகுதியை உள்ளடக்கியது.

அதேபோல் கிரிக்கெட் சீனா, அமெரிக்கா, போன்ற நாடுகளில் கால் பதிக்க ஒலிம்பிக் உதவிகரமாக இருக்கும் என்றார். (05)

## மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் வென்று

# தொடரை தனதாக்கியது இங்கிலாந்து; தென்னாபிரிக்காவின் சோகம் தொடர்கிறது



(லண்டன்)

ஷாமிற் பட்டேலின் துல்லியமான பந்து வீச்சு கைகொடுக்க மூன்றாவது ஒரு நாள் போட்டியிலும் 126 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இங்கிலாந்து தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது.

துடுப்பாட்ட வீரர்கள் ஏமாற்றமளிக்க தென்னாபிரிக்க அணி 170 ஓட்டங்களுடன் சுருண்டது. இங்கிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 4 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை தென்னாபிரிக்க அணி 3:1 என்ற கணக்கில் கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்று வரும் ஒரு நாள் தொடரில் முதலிரண்டு போட்டிகளில் வெற்றி பெற்று இங்கிலாந்து அணி 2:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ள நிலையில் மூன்றாவது போட்டி நேற்று முன்தினம் லண்டனில் நடைபெற்றது.

மீதமுள்ள மூன்று ஒரு நாள் போட்டிகளிலும் காயம் காரணமாக அணித் தலைவர் சிமித் விலகிய நிலையில் கலிஸ் அணித் தலைமைப் பொறுப்பை ஏற்றார்.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் களத் தடுப்பைத் தீர்மானித்தது. இதனடிப் படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி பெல், பிளின்டொப்பின் அதிரடியில் 50 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களையிழந்து 296 ஓட்டங்களை எடுத்தது.

இதில் அன்ரூ பிளின்டொப் ஆட்டமிழக்காமல் 78 ஓட்டங்களையும் இயன்பெல் 73 ஓட்டங்களையும் பிறிர் 33, பட்டேல் 31 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் போத்தா, கலிஸ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். பதிலுக்கு 50 ஓவர்களில் 297 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா அணி ஷாமிற் பட்டேலின் துல்லியமான பந்து வீச்சுக்கு ஈடு கொடுக்க முடியாமல் 42.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 170 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 126 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் அம்லா 46 ஓட்டங்களை எடுத்தார். பந்து வீச்சில் ஷாமிற் பட்டேல் 9.4 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 41 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் பிளின்டொப் 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியின் நாயகனாக இங்கிலாந்து அணியின் ஷாமிற் பட்டேல் தெரிவானார். இவ் வெற்றியின் மூலம் இங்கிலாந்து அணி ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரை 3:0 என்ற கணக்கில் தனதாக்கியது. (05)

## ஐ.சி.சி. தர வரிசைப் பட்டியலில் இந்திய அணி பின்னடைவு

(டுபாய்)

ஐ.சி.சி. சிறந்த அணிகளுக்கான தரப் பட்டியலில் இந்திய அணி ஐந்தாவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டது. ஐந்தாவது இடத்திலிருந்த இங்கிலாந்து 4-வது இடத்துக்கு முன்னேறியது.

சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி.) சிறந்த அணிகளுக்கான தரப் பட்டியலை வெளியிட்டது. இதில் சமீபத்தில் நடந்து முடிந்த இலங்கைக்கு எதிரான ஒரு நாள் தொடரை இந்தியா 3-2 என்ற கணக்கில் கைப்பற்றியது

தென்னாபிரிக்காவுக்கு எதிராக நடக்கும் ஒரு நாள் தொடரை இங்கிலாந்து 3-0 எனக் கைப்பற்றி முன்னிலை வகிக்கின்றது. இந் நிலையில் 4-வது இடத்திலிருந்த தோனி தலைமையிலான இந்திய அணி 113 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டது.

இங்கிலாந்து அணி 114 புள்ளிகளுடன் 4-வது இடத்திற்கு முன்னேறியது. தொடர்ந்து அவுஸ்திரேலியா 130 புள்ளிகளுடன் முதலிடத்தைத் தக்க வைத்துக் கொண்டது.

இரண்டாவது இடத்தில் தென்னாபிரிக்கா (120), மூன்றாவது இடத்தில் நியூசிலாந்து (116) அணிகள் உள்ளன. பாகிஸ்தான் (110), இலங்கை (105), மேற்கிந்தியத் தீவுகள் (95) மற்றும் பங்களாதேஷ் (46) புள்ளிகளுடன் அடுத்தடுத்த இடங்களைப் பெற்றுள்ளன. (05)

## அமெரிக்க ஓபன் டென்னிஸ் ரோஜர் பெடரர் 3-வது சுற்றில்



அமெரிக்க ஓபன் டென்னிஸ் 2-வது சுற்றுப் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. ஆண்கள் பிரிவில் உலகின் 2 ஆம் நிலை வீரர் ரோஜர் பெடரர் (சுவிஸ்லாந்து) பிரேசில் வீரர் அல்பேசை 6:3, 7:5, 6:4 என்ற செட்டில் தோற்கடித்து மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

உலகின் மூன்றாம் நிலை வீரர் டிஜோகோவிக் (செர்பியா) அமெரிக்க வீரர் ராபர்ட்டை 7:6, 6:4, 6:4 என்ற நேர் செட்டில் வீழ்த்தினார். மற்றப் போட்டிகளில் கான்சலஸ் (சிலி) ராபர்டோ (ஸ்பெயின்), வில்பிரட் (பிரான்ஸ்), நிக்கோலாய் (ரஷ்யா) ஆகியோரும் வெற்றி பெற்று மூன்றாவது சுற்றில் நுழைந்தனர்.

பெண்கள் பிரிவில் நடந்த மூன்றாவது சுற்றுப் போட்டியில் முன்னணி வீராங்கனைகளில் ஒருவரான டேவன் போர்ட் (அமெரிக்கா), பிரான்ஸ் வீராங்கனை பர்டோலியிடம் 6:1, 7:6 என்ற செட்டில் தோல்வியடைந்தார்.

உலகின் 2 ஆம் நிலை வீராங்கனை ஜான்கோவிக் (செர்பியா), சீனா வீராங்கனை ஜிசெங்கை 7:5, 7:5 என்ற நேர் செட்டில் தோற்கடித்தார்.

உலகின் மூன்றாம் நிலை வீராங்கனை குசன்ட் சோவா (ரஷ்யா), சுலோவாக்கிய வீராங்கனை கேரினாவிடம் 3:6, 7:6, 3:6 என்ற செட்டில் தோல்வியடைந்தார். மற்ற போட்டிகளில் டெமன்டிவா (ரஷ்யா), பட்டி சிஷெண்டர் (சுவிஸ்லாந்து), கரோலின் (டென்மார்க்) ஆகியோர் வெற்றி பெற்றனர். (05)



நல்லூர்க் கந்தசுவாமி ஆலய தீர்த்தத் திருவிழாவான நேற்று இடம்பெற்ற வெளிவீதியுலாக் காட்சி...

# தமிழ்நாட்டுக் கடைகளி ஒரு கிலோ அரிசி ஒரு ரூப

(சென்னை)

தமிழ்நாட்டில் தற்போது நியாயவிலைக் கடைகளில் நடைமுறையிலுள்ள கிலோ அரிசி 2 ரூபாய்க்கு வழங்கும் திட்டத்தில் மாற்றம் செய்து, இனி ஒருகிலோ அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்க தமிழக அரசு முடிபு செய்துள்ளது.

அண்ணா நூற்றாண்டு விழாவையொட்டி வரும் செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் இந்தத் திட்டத்தை அமுல் படுத்த முடிபு செய்திருப்பதர்க தமிழக அரசு அறிவித்திருக்கின்றது.

நேற்று மாலை சென்னையில் கருணாநிதி தலைமையில் நட அமைச்சரவைக் கூட்டத்தில் இது தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

முன்னதாக காலையில் நட தி.மு.க மாவட்டச் செயலர்கள் மற்று கிகள் கூட்டத்தில் ஒரு கிலோ அரிசி க்கு வழங்கவேண்டுமென்று அர றுத்தி தீர்மானம் நிறைவேற்றப்பட்ட

## பாண்டிச்சேரியில்...

நாட்டில் பணிபுரிந்துவரும் தனுஷன் (வயது 26) மகளான பிரான்ஸில் வசித்துவரும் சிறிதரன் தனுஷியா (வயது 33) பேர்த்தியாகிய ஒரு வயதே ஆன சிறிதரன் சரணிதா மற்றும் உறவினர்களான ஜெகநாதன் மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தாருகா ஆகியோார் படுகாயமடைந்த நிலையில் பாண்டிச்சேரி தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ச-5)

## தமிழ்க் கூட்டமை

பிரதமர் அழைப்பு விடுத்திருந்தன

இதன்படி அவர் விடுத்த அ இணங்கவே தமிழ்த் தேசியக் கூ னர் இந்தியாவுக்குச் செல்லவுள்ள போது அவர்கள் இலங்கையின் இ னை தீர்வு தொடர்பாக பேச்சுவார்த் வுள்ளனர்.

இந்தியப் பிரதமர் மன்மே வெளியுறவுத்துறை அமைச்சர் முகர்ஜி, தேசிய பாதுகாப்பு ஆலே கே.நாராயணன் ஆகியோரை மைப்பினர் சந்திக்கவுள்ளனர் என கப்பட்டுள்ளது.

## புதுமுறிப்பு பகுதி மீது...

புக்கு அண்மையாக செறிந்து தங்கியுள்ள மக்கள் வாழ்விடத்தின் மீது நேற்று மாலை படையினர் எறிகணைத் தாக்குதலை நடத்தியதாக விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதில் மக்கள் மத்தியில் ஒரு எறிகணை வீழ்ந்து வெடித்துள்ளதில் அந்த இடத்திலேயே இரு குழந்தைகள் உட்பட ஐவர் கொல்லப்பட்டனர். மூவர் காயமடைந்தனர்.

மன்னார் பரப்புக்கடந்தானைச் சேர்ந்தவர்களான அழகேசன் நிலுக்கா பத்மலதா (வயது 28),கறுப்பையா ஆனந்தராசன் (வயது 28),இவரின் இரண்டு வயதுக் குழந்தையான ஆனந்தராசா கௌதம், விசுவநாதன் திலகேஸ் (வயது 35) இவரின் ஒருமாதக் கைக் குழந்தை ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர்.

பாலசுப்பிரமணியம் இராஜேஸ்வரி (வயது 17) அழகேஸ்வரன் இயல்விழி (10 மாதம்) சிறுவனான விசுவநாதன் திவ்யன் ஆகியோர் காயமடைந்தனர்.

காயமடைந்தவர்களின் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## பயங்கரவாத...

குறிப்பிட்டார்.

உள்நாட்டில் இருந்தோ சர்வதேசத்தில் இருந்தோ எத்தகைய அழுத்தங்கள் வந்தாலும் இராணுவத்தினரின் நடவடிக்கை நிறுத்தப்படமாட்டாது. பயங்கரவாதத்துக்கு எதிரான யுத்தம் வெற்றிபெறும் வரை யுத்தத்தை முன்னெடுப்பதில் உறுதியாகவுள்ளதாக பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க கூறினார். (ச-3)

## ஆலங்குளத்தில்...

முன் நகர்வினை விடுதலைப் புலிகள் முறியடித்து படையினருக்கு பலத்த இழப்புக்களை ஏற்படுத்தினர்.

இதில் 20 படையினர் கொல்லப்பட்டனர். 25 படையினர் காயமடைந்தனர். கொல்லப்பட்ட படையினரின் நான்கு சடலங்களையும் படையப் பொருட்களையும் விடுதலைப் புலிகள் கைப்பற்றினர் என தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## வன்னிக்குள் அழிவுகளை ஏற்படுத்தி...

படுதோல்வியடைந்துள்ளன.

அதனால்,இப்போது மிரட்டிக் காரிய மாற்ற அரசு முனைகின்றது. இதேபோன்றதொரு மிரட்டல் திட்டத்தை பிரேமதாச அரசின் பாதுகாப்பு அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜேரத்னாவும் கையிலெடுத்துத் தோற்றிருந்தார்.

அப்போது 1990 ஆம் ஆண்டில் -யாழ்ப்பாணத்தின் முழு மக்கள் தொகையும் வவுனியாவுக்குள் இழுத்தெடுக்கும் அந்தத் திட்டம் படு தோல்வியடைந்திருந்தது. அதேபோன்றதொரு திட்டத்தைத்தான் மகிந்த -கோத்தபாய குழு இப்போதுகையில் எடுத்துள்ளது.

வன்னி மக்களை வவுனியாவுக்குள் இழுக்கும் இந்தத் திட்டம் மக்களை போர் நெருக்கடிக்குள் இருந்து பாதுகாப்பதற்கல்ல. மாறாக தமிழின அழிப்பை வஞ்சகமாக மேற்கொள்வதற்கேயாகும்.

வரலாற்றுப் புகழ்மிக்க யாழ்ப்பாண இடப்பெயர்வைத் தொடர்ந்து அந்த மக்களை ஆசை வார்த்தை காட்டி உள் இழுத்துப் பின்னர் செம்மணியில் புதைகுழிகளுக்குள் மூடிவிட்டமை தமிழினம் சந்தித்த சோகமான வரலாறாகும்.

கொழும்பிற்கும்- வவுனியாவிற்கும் சென்று பாதுகாப்பு தேட முனைந்த தமிழர்களை காணாமல் போகச் செய்வித்தும் -சுட்டுக் கொன்றும் -வீதிகளில், நீர்நிலைகளில் வீசியெறிந்தும் சிறைகளில் அடைத்துச் சித்திரவதை செய்தும் கோரமான வடிவில் தமிழின அழிப்பை மேற்கொள்கின்றது.

வவுனியாவிற்குள் அகப்பட்டுக் கொண்ட வெளிமாவட்டங்களைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கான மக்களை பல வருடங்களாக அகதி முகாம்களுக்குள்ளேயே வைத்து அவர்களை நிரந்தர அகதிகளாக அரசு மாற்றி விட்டுள்ளது.

இப்போது அந்த அகதிகளுடன் மேலும் பல இலட்சம் மக்களை அகதிகளாக்கிக் கொண்டு சென்று நிரந்தர அகதி முகாம்களுக்குள் அடைக்க அரசு திட்டமிடுகிறது.

தமிழினத்தை ஒரு அகதி இனமாக மாற்றுவதுதான் மகிந்த அரசின் திட்டம். இதற்கு ஒரு நாசகார அரசியல் நோக்கமுண்டு.அகதி என்ற அடையாளத்துடன் ஒரு மக்கள் கூட்டத்தை நீண்ட நாட்களுக்கு அடைத்து வைத்திருப்பதன் மூலம் அந்த மக்களின் தனித்துவங்களை அழித்து ஒரு நாடோடிக் கூட்டமாக மாற்றி வருவது ஆக்கிரமிப்பு அரசுகளின் பொதுவான வேலைத்திட்டமாகும்.

150 வருடங்கள் கழிந்த நிலையிலும் மலையக மக்களின் வாழ்க்கையை ஒரு 'லயன் வாழ்க்கையாகவே' நீள வைத்து, தமிழர்கள் என்ற காரணத்துக்காக அந்த மக்களை வாட்டி வதைக்கும் சிங்கள அரசின் ஈனச் செயல் எமது மக்களுக்கு தெரியாததல்ல.

சிறிலங்காவின் நகர்வுகளில் தமிழ் மக்களைச் சிங்கள கைகளில் சிக்கி சீரழிப்பதும் எமக்கு யாததல்ல. மட்டக்களப்பில் திருகோண யிலிருந்து பல்லாயிரக்கணக்கான ம இடம்பெயரச் செய்து அகதி முகாம்க அடைத்துவிட்டு அவர்களின் நில சிங்களவர்களை குடியேற்றிய வரல கக் கூடியதல்ல.

வன்னி மக்கள் மீதும் இத்தகை வஞ்சக அடிமைப்படுத்தலை மேற் மகிந்த அரசு செய்யும் முயற்சியை ந முறியடிப்போம். இன்று வன்னியில் மக்கள் அனைவரும் போராட்டப் பங் ளாகவே உள்ளனர். இது சிங்கள வாதிகளுக்கு எரிச்சலூட்டும் விடயமா கும் என்பதில் ஐயமில்லை.

எனவே இந்த மக்கள் மீது பழிவ கொலைவெறித் தாக்குதலைச் செய் ஆசைப்படுகின்றது. அதையும் நவீ வில்.மேற்கொள்ள அது விரும்புகின்

வன்னி மக்களை அகதிகளாக்கி வக் கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்குள் அகதி முகாம்களுக்குள் அடைத்துவிட் அகதி முகாம்களை சிங்களப் படை ஒரு வேட்டைக்களமாக மாற்ற மகிந் திட்டமிட்டுள்ளது என அதில் தெரிவி டுள்ளது.


NEW SCIENCE HALL
JAFFNA
2009 A/L
(2008 A/L பரீட்சைக்கு தோற்றியவர்களுக்குரியது)
DAY CLASS
எமது வழமையான ஆசிரியர் குழு
ஆரம்பம் -01.09.2008
திங்கள் காலை 9 மணி
(C-1490)


## புறக்கோட்டையில்...

புறக்கோட்டைப் பகுதியில் நேற்றுப் பகல் 12.15 மணியளவில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 47 பேர் காயமடைந்துள்ளனர்.

இவர்களில் பெரும்பாலானவர்களின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

புறக்கோட்டை ஒல்கொட் மாவத்தை பகுதியில் சன நெருக்கமான இடத்திலுள்ள மணிக்கூடு விற்பனை செய்யும் அங்காடி ஒன்றில் மர்மப் பொதியொன்றிலிருந்த குண்டு வெடித்ததாலேயே இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குண்டுவெடிப்பைத் தொடர்ந்து புறக்கோட்டை பகுதியெங்கும் பரபரப்பு நிலவியது.

பெரும்பாலான வர்த்தகர்கள் கடைகளை மூடினர். கொழும்பு நகர வீதிகள் பலவும் மூடப்பட்டன.

காயமடைந்தவர்கள் உடனடியாக கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர்.

இதேவேளை இக்குண்டு புச் சம்பவத்தில் காயமடை பேர் கொழும்பு தேசிய ம சாலையில் அனுமதிக்கப்ப திடீர் விபத்துக்கள் பணி டாக்டர் அனில் விஜயசிங் வித்தார்.

காயமடைந்தவர்களில் வர்களும் 7 பெண்களும் வதாகவும் அவர் குறிப்பி

சம்பவம் இடம்பெற்ற ப பிரதான வீதிகளில் போக் சில மணிநேரங்கள் மூடப் ததால் அப்பகுதியில் பெரிய நெரிசல் காணப்பட்டது.

பொலிஸாரும் இராணு ரும் அந்தப் பகுதியில் பட்டிருந்தனர். நேற்று வரை அப்பகுதியில் பாரிய நடவடிக்கைகள் மேற்கொ டன.

விடுதலைப் புலிகளே குண்டுவெடிப்புக்கு காரண இராணுவத் தரப்பினை மே காட்டி ஜனாதிபதி செயலக திருக்கின்ற அறிக்கையி விக்கப்பட்டிருக்கின்றது.

ஆனால் இந்தக் குண் புக்கு பொறுப்பேற்றோ மறுத்தோ புலிகள் தரப் கருத்து எதுவும் வெளியா வில்லை.


2008ல் A/L பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களே!
காலத்தை விரயமாக்காதீர்... எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்...
எங்குமில்லாத ஓர் அரிய சந்தர்ப்பம்
2012 MAYல் நீங்களும் ஒரு பொறியியலாளர்
August 28ல் பாடசாலையில் இருந்து விலகும் - நீங்கள் இரண்டு வாரத்திலேயே உங்கள் பட்டப்படிப்பை ஆரம்பியுங்கள்.
2008 A/L பரீட்சை எழுதிய மாணவர்கள் Pending result அடிப்படையில் சேர்க்கப்படுவார்கள்.
சித்தி எய்த தவறும் பட்சத்தில் 100 % கல்வி கட்டணம் மீளளிக்கப்படும்.
DONT MISS THIS GREAT OPPORTUNITY
சொற்ப அளவிலேயே அனுமதிகள் உள்ளதால் எம்மை விரைவாக அணுகுபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
தவணை அடிப்படையிலான கல்வி கட்டணம்
கல்வி ஆண்டு ஆரம்பம் 15.09.2008
A/Lல் 3Cக்கு மேல் பெறுபேறு பெற்ற மாணவர்களுக்கு கட்டணத்தில் விஷேட சலுகை......
Courses Offered:
Bachelor of Engineering (BE)
- Electronics & Communication Engineering
- Information Technology
- Electrical & Electronics Engineering - 4Year
- Computer science & Engineering
(Normal tution fees Rs(Ind)1.2 Lakh/Yr, Scholarship Rs(Ind) 0.2Lakh/Yr)
- Civil Engineering
- Mechanical Engineering
- Fashion Technology
(Normal tution fees Rs(Ind)1 Lakh/Yr, Scholarship Rs(Ind) 0.1 Lakh/Yr)
No Sponsor ship, Bank balance, Consultation Charges, No Ragging
Missed the E-facuty! Leave the worries! SONA - A Perfect place, more than your expectation!
Direct admissions from Sona College
SONA College is rank 27th among more than 2000 Engineering Colleges in INDIA
Sona college rank 5th under the Anna University
இந்திய அரசினால் அங்கீகரிக்கப்பட்ட All India Council For Technical Education (AICTE)இனால் வெளிநாட்டு மாணவர்களை அனுமதிப்பதற்கான சான்றிதழ் வழங்கப்பட்ட தமிழ்நாட்டில் உள்ள 04 கல்லூரிகளில் SONAவும் ஒன்று.
LONDON A/L STUDENTS ALSO CAN APPLY
Just make a call at any time to reach us
V4 EDUCATIONAL CONSULTANCY PRIVATE LIMITED
SONA COLLEGE OF TECHNOLOGY
Sona Nagar, Salem - 636005, Tamilnaadu, India
APPROVED BY AICTE, AFFILIATED TO ANNA UNIVERSITY & ISO CERTIFIED
E-mail : fnadmission@sonatech.ac.in web : www.sonatech.ac.in
Director-International Admissions, Sona College of Technology, Selam-636005.Tamilnadu,INDIA
நேரடித் தொடர்பு:- The Express Institute
Irupalai, Kopay Tel:0212225840
Mr.S.Jeyakanth -TP.0773867257, 0774366711 Mr.T.Elankeethan -TP.0212228374, 0775936343. Email - mail@v4edu.info
(C-1489)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 31.08.2008 இல் அச்சிட்டு வெளியி